# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 12220 / 2007 / எம்சி. 8 நாள் 14-07-2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜுலை 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.
-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 23.07.2007 ம் தேதி திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

மன்றச் செயலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## ஜுலை 2007 - மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி<br>இ) கேள்வி நேரம் |
| வ.எண். | ஈ). தீர்மானத்திற்குரிய பொருள், |
| 1. | பொறியியல் பிரிவு -தெற்கு மண்டலம் -வார்டு எண் 27 – அவிநாசி சாலை மாநகராட்சி வணிக வளாகம் (மேற்குப் பகுதி) -முதல்தளம் கட்டுதல் பணி -ரூ25 லட்சம் மதிப்பீடு - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 2. | பொறியியல் பிரிவு -தெற்கு மண்டலம் -வார்டு எண் 27 – அவிநாசி சாலை மாநகராட்சி வணிக வளாகம் (வடக்குப் பகுதி) -முதல்தளம் கட்டுதல் பணி -ரூ25 லட்சம் மதிப்பீடு - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 3. | பொறியியல் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 66 – சங்கனூர் முருகன் நகர் -மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணி-ரூ16 லட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 4. | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம் -காந்திபுரம் நகரப்பேருந்து நிலையத்தில் தார்தளம் புதுப்பித்தல் பணி- ரூ23 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5. | பணியமைப்பு -மேற்கு மண்டலம் - திரு கா. பெரோஸ்கான்-இளநிலை உதவியாளர் -இடம் வாங்கி வீடு கட்டிக்கொள்ள முன்பணம் வழங்குதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6. | பொறியியல் பிரிவு - 8 அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளுதல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 7. | பொறியியல் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண் 49 – திவான்பகதூர் சாலை கிழக்கு பகுதி - கௌலிபிரவுன் சாலை முதல் பொன்னுரங்கம் சாலை வரை நடைபாதை செப்பனிடுதல் பணி-ரூ16.25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 8. | பொறியியல் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண் 49 – திவான்பகதூர் சாலை மேற்கு பகுதி - கௌலிபிரவுன் சாலை முதல் பொன்னுரங்கம் சாலை வரை நடைபாதை செப்பனிடுதல் பணி-ரூ16.25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 9. | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 12 – நஞ்சுண்டாபுரம் சாலை மயானம்- எரிவாயு மயானம் அமைத்தல் -ரூ91 லட்சம் மதிப்பீடு-மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 10. | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 25 – தெற்கு மண்டல அலுவலகத்திற்கு தரைகீழ்தளம் கட்டுதல் பணி -ரூ25-லட்சம்- நிர்வாக அனுமதி கோருதல-தொடர்பாக |
| 11. | குடிநீர் பிரிவு -சிறுவாணி திட்டம் - குடிநீர் கட்டண நிலுவை செலுத்தக் கோரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு |
| 12. | JNNURM –பில்லூர் II –வது குடிநீர் திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்-அரசு ஆணை வெளியிடப்பட்டது –பதிவு செய்தல் -தொடர்பாக |
| 13. | மேற்கு மண்டலம் -திவான் பகதூர் ரோடு –வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலித்தல் -ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் –மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 14. | மேற்கு மண்டலம் -மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட் கட்டணக்கழிப்பிடம் -துறைமூலம் வசூல் செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **15.** | மேற்கு மண்டலம் -2007-08 ம் ஆண்டு ஏலஇனங்கள்-ஒப்படை செய்தல் -மற்றும் நீக்குதல் -மாமன்றத்தின் அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| **16.** | நகரமைப்புப் பிரிவு - பொது ஒதுக்கீட்டு இடங்கள் -மாநகராட்சி பராமரிப்பில் எடுத்தல் -சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்திரவு-மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் |
| **17.** | மேற்கு மண்டலம் -பூ மார்க்கெட் மேடை கடைகள்--உயர்நீதிமன்ற வழக்குகள் -வழக்கறிஞர் கட்டணம் வழங்குதல் -மாமன்ற அனுமதி வழங்குதல் -தொடர்பாக |
| **18.** | நகரமைப்புப் பிரிவு - தெலுங்குபாளையம் மற்றும் சங்கனூர் கிராமம் - இராமலிங்க நகர் மனைப்பிரிவு -பொது ஒதுக்கீடு இடம்-உயர்நீதிமன்ற உத்திரவு -மாநகராட்சி பராமரிப்பு செய்தல் -அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **19.** | கல்விப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி கணித பட்டதாரி ஆசிரியை செல்வி எஸ். அனிதா – மதுரை மாநகராட்சி கணித பட்டதாரி ஆசிரியை திருமதி வை. கீதாயஜ்ஞவல்லி-மனமொத்த இடமாறுதல் கோருதல் -மன்றத்தின் ஒப்புதல் பெறுதல் -தொடர்பாக |
| **20.** | நகரமைப்பு பிரிவு -மேற்கு மண்டலம் குமாரபாளையம் கிராமம் புல எண் 182 /2- காவல் நிலையம் அமைக்க நிலமாற்றம் செய்தல்-ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல் -மன்றத்தின் ஒப்புதல் பெறுதல் -தொடர்பாக |
| **21.** | மேற்கு மண்டலம் -மேட்டுப்பாளையம் ரோடு பன்னீர்செல்வம் பூமார்க்கெட் -மேடைக்கடைகள்-ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தல் -மன்றத்தின் ஒப்புதல் பெறுதல் -தொடர்பாக |
| **22.** | மேற்கு மண்டலம் - வார்டு எண் 35 – காமராஜபுரம் துப்புரவு பணியாளர்கள் காலனி –மாநகராட்சி கட்டிட அறை- Y.W.C.A அமைப்பிற்கு வாடகை உயர்வு செய்து அனுமதி நீடித்தல் -மன்றத்தின் அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **23** | பொறியியல் பிரிவு-1.4.2007 முதல் உயர்த்தப்பட்ட கட்டுமானப் பொருள்கள் விலை -மற்றும் தொழிலாளர்களின் கூலிகள் -மன்றத்தின் பார்வைக்கு |
| **24** | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 41 –இறைச்சிக் கடைகளுடன் கூடிய சந்தை கட்டும் பணி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -அரசுக்கு அனுப்புதல் -மாமன்ற அனுமதி கோருதல் |
| **25** | பொறியியல் பிரிவு-மேற்கு மண்டலம்-வார்டு எண் 48-மேட்டுப் பாளையம் சாலை-பூ மார்க்கெட் கட்டும் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -அரசுக்கு அனுப்புதல் -மாமன்ற அனுமதி கோருதல் |
| **26** | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 41 –காய்கறி கடைகளுடன் கூடிய சந்தை கட்டும் பணி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -அரசுக்கு அனுப்புதல் -மாமன்ற அனுமதி கோருதல் |
| **27** | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 23-ராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி – கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்- ரூ 24.7 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் |
| **28** | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 23-ராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி –வகுப்பறைகளுக்கு அபிவிருத்திப் பணிகள் செய்தல் - ரூ 23 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் |
| **29** | பொதுப்பிரிவு -72 வார்டுகள் -வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்கள் -2007 ம் ஆண்டு கணக்கெடுப்பு -மாமன்ற தகவலுக்காக |
| **30** | பொறியியல் பிரிவு-மேற்கு மண்டலம்-வார்டு எண் 55-திரு வி.க. வீதி -கூடுதல் கழிவறைகள் -பால்வாடி கட்டுதல் - ஒப்புதல் வழங்கப் பட்டது –ரத்து செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் |
| **31** | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம்-வார்டு எண் 17- வி.ஜி. ராவ் நகர் பிரதான சாலை – தார்தளம் புதுப்பித்தல் பணி -ரூ15.9 லட்சம் மதிப்பீடு –நிர்வாக அனுமதி கோருதல் |
| **32** | **JNNURM** - நீர்நிலைகள் புனரமைத்தல் -திட்டம் செயல்படுத்துதல் -பொதுப்பணித்துறை –வைப்புத்தொகை பணியாக செயல்படுத்துதல் -கடிதம் -மன்றத்தின் முடிவிற்கு |

| | |
|---|---|
| **33** | தெற்கு மண்டலம் - காலியாக உள்ள வணிக வளாகக் கடைகள் - ஏலக் கோரிக்கைகள் ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **34** | பணியமைப்பு -திரு ஐ. நாசர்,இளநிலை பொறியாளர் -இடம் வாங்கி வீடு கட்ட முன்பணம் அனுமதித்தல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **35** | தெற்கு மண்டலம் -அவிநாசி ரோடு வணிக வளாகம்- கடை எண் 22 மற்றும் 23 – நிலுவை உரிமத் தொகை வசூலித்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **36** | நகரமைப்புப் பிரிவு -அவிநாசி சாலை வணிக வளாகம்-12,148 சதுரடி முதல் தளம் கட்டுதல் -பாஸ்போர்ட் அலுவலகம் அமைத்தல் - குத்தகைக்கு வழங்குதல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **37** | நகரமைப்புப் பிரிவு -கிழக்கு மண்டலம் -கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் சுத்தகரிப்பு நிலையம் அமைத்தல்-சிங்காநல்லூர் கிராமம்-10 ஏக்கர் நிலம் -கட்டாய நிலஆர்ஜிதம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **38** | குடிநீர் விநியோகம்-குடிநீர் கட்டணம் திருத்தி அமைத்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **39** | JNNURM -திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் -பயனாளிகள் சேவைக் கட்டணம் நிர்ணயம் செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **40** | தெற்கு மண்டலம் -வணிக வளாகக் கடைகள்-வாடகை உயர்வு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

**இணைப்பு - 3**

**நன்றியுரை .**

அ.

---

## திருக்குறள்

செயற்கை அறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை அறிந்து செயல்.

குறள்-637

## விளக்கம்

**செயலாற்றல் பற்றிய நூலறிவைப் பெற்றிருந்தாலும், உலக நடைமுறைகளை உணர்ந்து பார்த்தே அதற்கேற்றவாறு அச்செயல்களை நிறைவேற்ற வேண்டும்.**

திருவள்ளுவர்

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

| |
|---|
| **இ. கேள்வி நேரம்** |
| **23-07-2007 ம் தேதி மாமன்ற சாதாரணக் கூட்டம்** |
| **மாமன்ற உறுப்பினர்களது கேள்வி நேரம் பட்டியலிட்டு கொடுக்கப்பட்டுள்ளது.** |
| **மாமன்றத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாமன்ற உறுப்பினர்களின் பெயரை அழைத்தவுடன் மன்ற உறுப்பினர் எழுந்து மன்றத்தின் பட்டியலில் உள்ள அவரது கேள்வியினை கேட்கலாம்.** |
| **கேள்விக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பதிலளிப்பார்கள்.** |

**மாமன்ற தீர்மான எண் 41 நாள் 23.07.07**

இந்திய திருநாட்டின் முதல் பெண் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி பிரதிபா பாட்டீல் அவர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களை தேர்வு செய்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் அன்னை சோனியாகாந்தி அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், சி.பி.ஐ. தலைவர்களுக்கும், சி.பி.எம். தலைவர்களுக்கும் மற்றும் ஆதரவு அளித்த சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் அனைவருக்கும் பாராட்டுதல்களையும், நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 27க்குட்பட்ட அவினாசி சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் மேற்குப் பகுதியில் உள்ள கட்டிடத்தில் முதல் தளம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000-ற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 11943/ 2007 / எம்.டி.4

**மாமன்ற தீர்மான எண் 42 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 2**

மாநகராட்சி தெற்கு மண்டலம் பொறியியற் பிரிவு II வார்டு எண் 27-ல் அவினாசி சாலையில் அமைந்துள்ள மாநகராட்சியின் வணிக வளாகத்தில் வடபுறம் உள்ள கட்டிடத்தில் முதல் தளம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000-ற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 2688 /2007 / எம்.டி.4

**மாமன்ற தீர்மான எண் 43 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பிரிவு எண் 5 வார்டு எண் 66 ல் சங்கனூர் முருகன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 16,00,000/- க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டுதல் சம்பந்தமாக.

இம்மனைப்பிரிவு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாகும். மழையால் ஏற்படும் வெள்ள பாதிப்பை தடுக்கும் பொருட்டு அவசியம் கருதி இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே வார்டு எண் 66 ல் சங்கனூர் முருகன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீடு ரூ. 16,00,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 4365/ 07/ டி1(வ) / எம்.டி.2

**மாமன்ற தீர்மான எண் 44 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் பிரிவு எண் II, காந்திபுரம் நகரப்பேருந்து நிலையத்தின் தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு ரூ. 23,00,000/-க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணிக்கு நிர்வாக அனுமதி கோரி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10029/ 07/ எம்.டி.4

**மாமன்ற தீர்மான எண் 45 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

பணியமைப்பு - கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திரு கா. பெரோஸ்கான், இளநிலை உதவியாளர் - இடம் வாங்கி வீடு கட்டிக் கொள்ள முன்பணம் அனுமதித்தல் - தொடர்பாக.

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் திரு கா. பெரோஸ்கான், குனியமுத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட க.ச.எண்கள் 590/ 2, 591/ 2, 591/3 பகுதி காலைகளில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவில் உள்ள மனை எண் - 28 ஐ தனது பெயரில் கிரையம் பெறும் பொருட்டும், அதில் வீடு கட்டி கொள்ளவும் மாநகராட்சி வீடுகட்டும் முன்பண நிதியில் இருந்து ரூபாய் 4.50 இலட்சம் தற்போதைய முன்பண விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கவும், மேற்படி தொகையினை அரசு விதிமுறைகளின்படியும், மாநகராட்சி விதிகளின்படியும் மூன்று தவணைகளில் அவருக்கு வழங்கவும், மேற்படி அசல் தொகையினை 180 மாத சமதவணைகளிலும் பின்னர் வட்டி தொகையினை 60 மாத சமதவணைகளிலும் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் - 9311/06/C1/W

**மாமன்ற தீர்மான எண் 46 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 21-05-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9064/06/ எம்.டி.4 | வார்டு எண் 49 திருவேங்கிடசாமி ரோடு மேற்கு (இரண்டாவது பகுதி) மறு தார்தளம் அமைத்தல் | 19.20 | 22-04-07 முதல் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 0.10% குறைவு |
| 2 | 9063/06/ எம்.டி.4 | வார்டு எண் 48 ராமலிங்கம் ரோடு, அருணாச்சலம் ரோடு மற்றும் மெக்ரிக்கர் ரோட்டில் மறுதார்தளம் அமைத்தல் | 16.75 | 22-04-07 முதல் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 0.08% குறைவு |
| 3 | 9031/06/ எம்.டி.4 | வார்டு எண் 49 மேற்கு பெரியசாமி ரோடு மற்றும் குறுக்குசாலைகளில் மறுதார்தளம் அமைத்தல் | 15.75 | 15-05-07 முதல் அழைப்பு | திரு. எம். துரைசாமி | 0.03% குறைவு |
| 4 | 42214/06/ எம்.டி.2 | வார்டு எண் 10 சங்கர் லேஅவுட் பேருந்து சாலையில் மறுதார்தளம் அமைத்தல் | 17.00 | 15-05-07 முதல் அழைப்பு | தி/ள். சாந்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.28% குறைவு |
| 5 | 3720/07/ எம்.டி.3 | வார்டு எண் 49 டி.பி. ரோடு கிழுபுறத்தில் பொன்னுரங்கம் ரோடு முதல் ராமச்சந்திரா ரோடு வரை சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல் | 20.00 | 15-05-07 முதல் அழைப்பு | தி/ள்.எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 0.19% குறைவு |
| 6 | 3719/07/ எம்.டி.3 | வார்டு எண் 49 டி.பி. ரோடு மேற்கு புறத்தில் பொன்னுரங்கம் ரோடு முதல் ராமச்சந்திரா ரோடு வரை சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல் | 20.00 | 15-05-07 முதல் அழைப்பு | தி/ள்.எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 0.19% குறைவு |
| 7 | 8934/04/ எம்.டி.4 | வார்டு எண் 13 கருணாநிதி நகரில் உள்ள பதிய வார்டு அலுவலகத்தில் சுற்றுசுவர் கட்டுதல் | 5.00 | 08-05-07 நான்காம் அழைப்பு | திரு. கே. கோவிந்த ராஜ் | 4.74% அதிகம் |
| 8 | 11021/05/ எம்.டி.4 | வார்டு எண் 37 வெறைட்டி ஹால் ரோட்டில் உள்ள சிட்டி முனிசிபல் மேல்நிலைப்பள்ளியில் சுற்றுசுவர் கட்டுதல். | 8.25 | 18-04-07 மூன்றாம் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் | 1.21% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 முதல் 6 வரை உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 7முதல் 8 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 9064/06/எம்.டி4.**

**மாமன்ற தீர்மான எண் 47 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் :7

கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண் 49 திவான் பகதூர் சாலையின் கிழக்கு பகுதியில் கௌலிபிரவுன் சாலை முதல் பொன்னுரங்கம் சாலை வரையுள்ள சிமெண்ட் கான்கீரிட் நடைபாதையை செப்பனிட்டு தரும்படி இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மதிப்பீடு ரூ. 16,25,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு, நிர்வாகப்பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கு 2007-2008 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9444/ 07/ எம்.டி.4

**மாமன்ற தீர்மான எண் 48 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் :8

கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண் 49 திவான் பகதூர் சாலையின் மேற்கு பகுதியில் கௌலிபிரவுன் சாலை முதல் பொன்னுரங்கம் சாலை வரையுள்ள சிமெண்ட் கான்கீரிட் நடைபாதையை செப்பனிட்டு தரும்படி இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மதிப்பீடு ரூ. 16,25,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு, நிர்வாகப்பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கு 2007-2008 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9441/ 07/ எம்.டி.4

**மாமன்ற தீர்மான எண் 49 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் :9

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட தெற்கு மண்டலம் வார்டு எண் 12 நஞ்சுண்டாபுரம் சாலையிலுள்ள மாநகராட்சி மயானத்தில் புதியதாக எரிவாயு மயானம் **(Gasifier Crematorium)** அமைக்க மதிப்பீடு ரூ. 91,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி நஞ்சுண்டாபுரம் மயானப்பகுதி மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. இந்த மயானம் அமைக்கப்பட்டால் இப்பகுதியினை சுற்றியுள்ள 9 வார்டு பொதுமக்கள் சுமார் 90,000 பேர் இம்மயானத்தினை பயன்படுத்த ஏதுவாக இருக்கும். 12 வது வார்டு மாமன்ற உறுப்பினர் இந்த இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய **(Gasifier Crematorium)** அமைத்துத் தருமாறு கோரியுள்ளார்கள். மேலும் தெற்கு மண்டலத் தலைவர் அவர்களும் இப்பகுதியில் மேற்படி மயானம் அமைக்குமாறு தெரிவித்துள்ளார்கள். எனவே நஞ்சுண்டாபுரம் மயானத்தில் புதிய எரிவாயு மயானம் **(Gasifier Crematorium)** அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 91,00,000/- க்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 4616/ 07/ எம்.டி.4

**மாமன்ற தீர்மான எண் 50 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் :10

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட தெற்கு மண்டலம் வார்டு எண் 25, ஒசூர் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பயணிகள் தங்கும் விடுதி வளாகத்தினுள் தெற்கு மண்டல அலுவலகத்திற்கு தரைகீழ்தளம் ( செமி பேஸ்மென்ட் தளம் ) கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. புதிதாகக் கட்டப்படும் தெற்குமண்டல அலுவலகத்திற்கு போதிய திறந்தவெளி வாகன நிறுத்துமிடம் இல்லாததால், தரைகீழ்தளம் அமைத்து அதில் வாகனங்கள் நிறுத்த இடவசதி செய்யுமாறு வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர், துணைமேயர், மற்றும் மண்டலத்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே தெற்கு மண்டல அலுவலக கட்டிடத்திற்கு தரைகீழ்தளம் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 25,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9546/ 07/ எம்.டி.4

**மாமன்ற தீர்மான எண் 51 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் : 11

கோவை மாநகராட்சியின் பிரதான நீராதாரமாக விளங்கும் சிறுவாணி திட்டமானது 1931-ம் ஆண்டு கோவை நகராட்சியால் மதிப்பீடு ரூ. 44.00 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயனில் இருந்து வந்தது 1949-ல் மேம்பாடு திட்டத்தின் மூலம் 450 மி.மீ. விட்ட இரும்புக் குழாய் கூடுதலாக பதிக்கப்பட்டு 1954-ல் பயனுக்கு கொண்டு வரப்பட்டது. 1975-ல் ரூ. 196 இலட்சம் மூன்றாம் குடிநீர் 20" மெயின்குழாய் பதிக்கப்பட்டது. மேற்கண்ட மூன்று நீர் கொணரும் குழாய் மற்றும் நீர் தேக்கத் தொட்டிகள் அனைத்திற்கு ஆன செலவினம் அனைத்தையும் முதலாம் திட்டம் II ம் ஐந்தாண்டு திட்டம் மற்றும் ஆயுள் காப்பீட்டு கழகம் மூலம் கோவை மாநகராட்சியால் கடனாக பெறப்பட்டு திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் வழியோர கிராமங்கள் 7 எண்ணிக்கையினுக்கும் மூலதனச் செலவு ஏதும் பங்கு பெறாமல் தண்ணீர் மட்டும் கோவை நகராட்சி வழங்கியுள்ளது. மாநிலங்கள் சீரமைப்புக்கு பின் சிறுவாணி நீர் ஆதாரம் கேரள மாநில எல்லையினை சேர்ந்த பகுதியாகி விட்டபடியால் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையே தமிழநாட்டிற்கு 101.4 எம்.எல்.டி. நீர் பெறுவதற்கான ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தும் பொருட்டு விரிவான ஆய்வுப் பணிகள் அரசு ஆணை எண் 1023 பொதுபணித்துறை நாள் 26-04-66-ன் படி துவங்கப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. திட்ட அறிக்கையின்படி 1973-ல் தமிழ்நாடு மற்றும் கேரள அரசுக்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. அரசு ஆணை எண் 2343 R.D LA 21-08-1976-ன் மூலம் 1616 இலட்சங்கள் கட்டுமானப் பணிக்கும் ஆண்டு பராமரிப்பு ரூ. 35 இலட்சம் என ஒப்புதல் வழங்கியுள்ளது. அணை மற்றும் சுத்திகரிப்பு நிலையம் 1000 மி.மீ. விட்ட நீர் கொணரும் குழாய் மற்றும் நகரில் உள்ள நீர் தேக்க தொட்டிகள் அனைத்தும் நிறுவும் பணிகள் 1977-ல் தொடங்கப்பட்டு 1982-ல் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து பணிகளும் அரசு கடன் ரூ. 17-48 கோடியும் ஆயுள் காப்பீட்டுத் கழகத்திடமிருந்து ரூ. 8.30 கோடியும் ஆக 25.38 கோடி மாநகராட்சியால் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

எனவே , சிறுவாணி குடிநீர் திட்டம் கோவை மாநகராட்சிக்கென தனித் திட்டமாக செயல்படுகிறது. கூட்டுக் குடிநீர் திட்டமாக இதை கருத இயலாது. 1973-ல் தமிழக அரசும், கேரள அரசும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கூட தொடக்கத்தில் ( C) பிரிவில் தமிழக அரசு கோயம்புத்தூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு இத்திட்டத்தை செயல்படுத்த இருப்பதாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கோவை மாநகராட்சிக்கென தனித் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு சுற்றுப்புற நகர்களுடன் இணைந்த பகுதிகள் , வழியோர குடியிருப்புகள் இதர வர்த்தக மற்றும் பொது நிறுவனங்களுக்கு கோவை மாநகராட்சியின் மூலதனத்தில் செயலாக்கப்பட்ட திட்டத்திலிருந்து குடிநீர்வழங்கப்படுகிறது. நீர்பணித்தலைமை இயக்கம், சுத்திகரிப்பு நிலையம், நீர் எடுத்துவரும்குழாய் வழியோர கிராம விநியோகம் அனைத்தும் 1984 வரை நகராட்சியின் பராமரிப்பில் இருந்து வந்தது. இருப்பினும் திட்டத்தினை செயல்படுத்த கடனாக நிதி உதவி வழங்கிய உலக வங்கியின் நிபந்தனையின் அடிப்படையில் 1984-ம் ஆண்டு நீர் பணி தலைமையிடம் மற்றும் நீர் கொணரும் குழாய்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் இருக்க வேண்டும் என்பதனால் மாநகராட்சியும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் ஒப்பந்ததில் கையொப்பம் இட்டு அதன் அடிப்படையில் பராமரிப்பு பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டது. ஒப்பந்தக்காலம் ஏப்ரல் 2004-ல் முடிவடைந்துள்ளது.

எனவே ஏற்கனவே, மாமன்றத் தீர்மானத்தில் குறிப்பிட்டபடி சிறுவாணி குடிநீர்திட்ட பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து கோவை மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோரவும் மற்றும் சிறுவாணி குடிநீர் கட்டண நிலுவை ரூ.78.50 கோடி தள்ளுபடி செய்யவும் அரசின் அனுமதிக்கு பிரேரணை அனுப்ப சில விபரக் குறிப்புகளுடன் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது.

மாமன்றம் தமது தீர்மான எண் 246 நாள் 02-02-2007-ல் கீழ்க்கண்ட சில விபரக் குறிப்புகளை உள்ளடக்கி அனுமதி வழங்கியுள்ளது.

1) சிறுவாணி குடிநீர்த் திட்டத்தினை தமிழநாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து மாநகராட்சி ஏற்றுக் கொண்டு பராமரிப்பு செய்தல்.

2) அதனைச் சேர்ந்துள்ள அனைத்துச் சொத்துக்களை மற்றும் தளவாடங்களையும் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்ய கோருதல்.

3) நிலுவை குடிநீர் கட்டணம் ரூ. 78.50 கோடி பராமரிப்பு செலவினத்திற்கு ஒப்பீடு செய்யமிக அதிகமாகவுள்ளதால் தள்ளுபடி செய்ய அரசினைக் கோருதல்.

மேற்கண்ட காரணங்களை பரிசீலனை செய்து, அரசு செயலர் அவர்கள் மேற்படி சிறுவாணி குடிநீர்த் திட்டப் பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து கோவை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யவும், அதனைச் சார்ந்துள்ள சொத்துக்கள் மற்றும் தளவாடங்களையும் ஒப்படை செய்ய கோரவும் நிலுவை குடிநீர் கட்டணம் ரூ. 78.50 கோடி பராமரிப்பு செலவினத்திற்கு ஒப்பீடு செய்ய மிக அதிகமாக உள்ளதால் தள்ளுபடி செய்யவும் ஆவன செய்து உத்திரவு வழங்குமாறு அரசுச் செயலர், ந.நி.ம.கு.வ.துறை , தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 11640 /97 ப.வ.எம் நாள் 05-02-07-ன்படி அனுப்பப்பட்டது.

தற்பொழுது , தலைமை பொறியாளர், தமிழநாடு குடிநீர் வடிகால் வாரியம், மேற்கு மண்டலம் அவர்களது நேர்முக கடித எண் F14216 /B8/CE/WR 2006 / நாள் 25-05-2007-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிதி நிலை பற்றாக்குறையின் காரணமாக குடிநீர் திட்ட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் குடிநீர் வடிகால் வாரியம் உள்ளபடியால் , மாநகராட்சி செலுத்த வேண்டிய குடிநீர் கட்டண நிலுவையினை செலுத்தும் மாதாந்திர தவணை விபரத்தினை தெரிவிக்க வேண்டி வரப் பெற்ற கடிதத்தினை மாமன்றத்தின் பார்வைக்கு.

அலுவலகக்குறிப்பு : மன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண் : 11640 / 97/ ப.வ.(எம்)

## மாமன்ற தீர்மான எண் 52 நாள் 23.07.07

சிறுவாணி குடிநீர் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து மாநகராட்சி ஏற்றுக்கொண்டு பராமரிக்கவும், நிலுவை குடிநீர் கட்டணத்தை தள்ளுபடி செய்ய அரசை மீண்டும் வலியுறுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இதுகுறித்து அரசின் இறுதி உத்திரவு வரும்வரை குடிநீர் கட்டணம் செலுத்த இயலாது என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தெரிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

அரசு ஆணை எண் (டி) 160 ந.நி.ம.கு.வ.துறை, 17-04-2007-ம் தேதிய அரசாணையில் மத்திய அரசின் அனுமதி பெற்ற ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு மையத்தின் கீழ், மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளுக்கு செயல்படுத்துவதற்கான திட்ட பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 352.73 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி அரசாணையில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு மையத்தின் திட்டங்களுக்கான நிதி விபரப்படி 50% மத்திய அரசின் மானியம், 20% தமிழ்நாடு அரசின் மானியம் , மீதம் 30% மாநகராட்சிகளின் பங்குத் தொகை அதில் கோவை மாநகராட்சியின் பங்குத் தொகை கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் கோடியில்

| திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசின் மானியம் 50 % | தமிழ்நாடு அரசின் மானியம் 20% | மாநகராட்சியின் பங்கு 30 % |
|---|---|---|---|---|
| பில்லூர் II வது திட்டம் | 113.74 | 56.87 | 22.75 | 34.12 |
| திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 96.51 | 48.26 | 19.30 | 28.95 |

கோயம்புத்துர் மாநகராட்சிக்கென பில்லூர் குடிநீர் இரண்டாவது திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களுக்கு மாநகராட்சியின் பங்குத் தொகை 30% தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திடமிருந்து ( TNUIFSL ) நிதி உதவி பெறுவதற்கு மேற்படி அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைப் பொறுத்தவரை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ள இருப்பதால் மாநகராட்சி பங்குத் தொகை செலுத்த வேண்டி இராது.

அரசாணையை பதிவு செய்யலாம். ந.க.எண் 10895 /07 /ப.வ.(எம்)

**மாமன்ற தீர்மான எண் 53 நாள் 23.07.07**

அரசாணையைப் பதிவு செய்யவும், பில்லூர் II-ம் குடிநீர் திட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL), உலக வங்கியின் விதிமுறைகளின்படி, நிதியுதவி முடிவு செய்துதர 5 மாதகாலம் ஆகும் என தெரிவித்துள்ளதால், காலவிரயம் மற்றும் அதிகமான திட்ட செலவினம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாநகராட்சியின் பங்குத் தொகையான 30 சதவீதத்தை வருடம் ஒன்றுக்கு ரூ.10/- கோடி வீதம் மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து 3 ஆண்டுகளுக்கு, பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்து திட்டத்தை நிறைவேற்றவும், மீதமுள்ள தொகைக்கு தேவை ஏற்படின் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 13**

பொருள் : ஏலம் 2006-2007 கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திவான் பகதூர் ரோடு – வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை – உச்சத்தொகை ஏலதாரருக்கு ஒப்படை செய்யப்பட்டது – பின்னேற்பு வழங்குதல் - பற்றியது.

- - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் திவான்பகதூர் ரோட்டிலுள்ள வாகனம் நிறுத்தும் இடத்தில் 2006-2007-ம் ஆண்டுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் 9 நபர்கள் கலந்து கொண்டு ஏலம் கோரினர். 4 நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இதில் திருமதி. மீனாள் என்பவர் உச்சக்கேள்வியாக ரூ. 5,10,080/- ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இதே இனத்தை திரு. பி.எல். ராமசாமி என்பவர் 2005-2006-ம் ஆண்டில் ரூ.1,51,000/-க்கு ஏலத்தில் எடுத்திருந்தார்.

மாநகராட்சி வழக்கறிஞரின் 19.1.2006-ம் தேதிய கடிதத்தில் திரு. ராமசாமி என்பவர் தடைகோரி O.S.114/2006-ல் கூடுதல் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளதால் மேற்படி இனத்திற்கு ஏலம் நடத்திடவும் ஆனால் ஏலத்தொகையை முடிவு செய்வது நிறுத்திவைக்குமாறும் குறிப்பிட்டிருந்ததை தொடர்ந்து மேற்படி ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது நிறுத்தி வைக்கப்பட்டது.

மாநகராட்சி வழக்கறிஞரின் 25.2.2006 தேதியிட்ட கடிதத்தில் மேற்படி இனத்தின் மீது வழக்கு தொடர்ந்த திரு. பி.எல். ராமசாமி வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி இனத்தின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது கடிதம் எண். 13686/2006 ஆ2 நாள் 27.3.2006ன் படியும் 29.3.2006 தேதிய ஆணையர் அவர்கள் உத்திரவின்படியும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி உச்சகேள்விதாரர் திருமதி. மீனாள் என்பவருக்கு ஒப்படை செய்யப்பட்டது.

திவான் பகதூர் ரோடு வாகனம் நிறுத்துமிடத்தில் 2006-2007ஆம் ஆண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை உச்ச ஒப்பந்தப்புள்ளியான ரூ.5,10,080/-க்கு திருமதி. மீனாள் என்பவருக்கு ஒப்படை செய்துள்ளதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.2 நாள் 7.5.2007-ல் பின்னேற்பு வழங்கியுள்ளது.

எனவே 2006-2007ம் ஆண்டிற்கு திவான்பகதூர் ரோடு வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை உயர்ந்தபட்ச கேள்விதாரர் திருமதி. மீனாள் என்பவருக்கு ஒப்படை செய்தமைக்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : பின்னேற்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 11110/05/ அ1 மே.

**மாமன்ற தீர்மான எண் 54 நாள் 23.07.07**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 7.5.2007-ம் தேதிய தீர்மானத்தை ஏற்று பின்னேற்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் : ஏலம் 2006-2007 கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட் கட்டணக்கழிப்பிடம் ஏலதாரர் வசூல் உரிமம் ஏற்காதது – துறை மூலம் வசூல் - பின்னேற்பு வழங்குதல் - பற்றியது.

- - - -

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மேற்கு மண்டலம் மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட்டிலுள்ள கட்டணக்கழிப்பிடத்தில் 2006-2007ம் ஆண்டிற்கு கட்டணம் வசூலிக்கம் உரிமைக்கு 19.1.2006, 24.1.2006 மற்றும் 9.6.2006 ஆகிய தேதிகளில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இந்த இனத்திற்கு சென்ற மூன்று ஆண்டுகளில் ஏலம் மூலம் ஏலத்தொகைகள் ஒப்படைக்கப்பட்ட ஏலத்தொகைகள் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 2003-2004 | - | ரூ. 3,77,000/- |
| 2004-2005 | - | ரூ. 3,80,000/- |
| 2005-2006 | - | ரூ. 4,32,000/- |
| 3 ஆண்டு சராசரி | - | ரூ. 3,96,000/- |

இந்த இனத்திற்கு 4 முறை ஏலம் கோரப்பட்டதில் யாரும ஏலம் கோர முன்வரவில்லை. இதனால் 1.4.2006 முதல் மாநகராட்சி துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வந்தது.

மேற்படி இனத்தில் ஒரு மாத வருமானமாக சுமார் ரூ.15,420/- மட்டும் மாநகராட்சியால் துறை வசூல் செய்யப்பட்டு வந்தது. இதற்கு மாதம் ரூ.10,200/- பராமரிப்பு செலவு ஏற்படுகிறது. இதனால் நிகர லாபம் மாதம் ஒன்றுக்கு ரூ.5,220/- ஒரு வருடத்திற்கு ரூ62,640/- ஆகும்.

மேற்படி இனத்திற்கு 2 முறை ஏலம் கோரியும் யாரும் கலந்து கொள்ளாததால் 3வது முறையாக நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 2,76,001 குறைவாக இருந்ததால் மறு ஏலம் கோரப்பட்டது. இறுதியாக 9.6.2006-அன்று நடைபெற்ற ஏலத்தில் 11 நபர்கள் கலந்து கொண்டனர். ஆனால் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. திரு.டி.ரகுபதி என்பவர் மட்டும் ஒரு வருட குத்தகையாக ரூ.2,52,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இத்தொகையானது சென்ற 3 ஆண்டு ஏலத்தொகைகள் மற்றும் 3 ஆண்டு சராசரித்தொகை ஆகியவற்றைக்காட்டிலும் குறைவாக உள்ளது. மேற்படி தொகை குறைவாக இருப்பினும் மாநகராட்சி பணியாளர்களை மேற்படி இனத்தின் வசூல் பணிக்கு இருவரை அனுப்பி வைப்பதனால் ( பணியாளர்கள் மிகவும் குறைவாக உள்ள நிலையில் ) பணியில் ஏற்படும் தேக்கத்தை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ள வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்க உத்தேசிக்கப்படடிருந்த நிலையில் ஏலதாரர் டி.ரகுபதி என்பவர் தனது 28.6.2006-ம் தேதிய கடிதத்தில் மேற்படி கழிவறை வசூல் மிகவும் குறைவாகவே வரும் என தோன்றுவதால் தனக்கு வசூல் உரிமம் வேண்டாம் என தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் மேற்படி பொருளை தவிர்க்கவும், தொடர்ந்து துறை மூலம் வசூல் செய்தமைக்கும் பின்னேற்பு வழங்க வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 2 நாள் 7.5.2007ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே ஏலதாரர் திரு.டி.ரகுபதி என்பவர் மேற்படி கழிவறை வசூல் குறைவாகவே வரும் என தோன்றுவதால் வசூல் உரிமம் தனக்கு வேண்டாம் என தெரிவித்ததின் அடிப்படையில் மேற்படி பொருளை தவிர்க்கவும், தொடர்ந்து துறை மூலம் வசூல் செய்தமைக்கும் பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : பின்னேற்பு அனுமதிக்கலாம். ந.க. எண். 11110/05/ அ1 மே.

## மாமன்ற தீர்மான எண் 55 நாள் 23.07.07

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 7.5.2007-ம் தேதிய தீர்மானத்தை ஏற்று பின்னேற்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : குத்தகை இனங்கள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் 2007-2008ஆம் ஆண்டுக்கான ஏல இனங்கள் 1 மற்றும் 12 ஒப்படை செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு வழங்குதல் - பற்றியது.

- - -- - -

கோயம்த்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்கள் 2007-2008ம் ஆண்டிற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 26.2.2007, 8.3.2007 23.3.2007 மற்றும் 27.3.2007 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் ஏல இனம் எண்.2 முதல் 11 வரை உயா்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிய ஏலதாரா்களுக்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவா் முன் அனுமதி பெற்று மாமன்ற தீா்மான எண்.303 நாள் 30.3.2007-ன்படி ஒப்படை செய்யப்பட்டுள்ளது. ஏனைய கீழ்க்குறிப்பிட்ட இனங்களுக்கும் 8.3.2007-ல் ஏலம் , ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் எண் | இனம் |
|---|---|---|
| 1 | 1 | பன்னீா் செல்வம் பூ மாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (28 நிரந்தரக்கடைகள் மற்றும் 144 மேடைக்கடைகள் நீங்கலாக) |
| 2 | 12 | திவான் பகதூா் சாலை மாநகராட்சி பள்ளி வாளக மைதானத்தில் வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமை. |

இதில் ஏல இனம் 1-க்கு வாய்மொழி ஏலத்தில திரு. பி. முருகேசன் என்பவா் ரூ.11,51,000/-க்கு ஏலம் கோரினாா். ஆனால் இதே இனத்திற்கு திரு. மா. மகுடபதி என்பவா் ரூ.13,50,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளாா்.

ஏல இனம் 12க்கு வாய்மொழி ஏலம் முடிந்து, ஒப்பந்தப்புள்ளு திறக்கப்பட்டதில் திருமதி.எஸ்.மாரிமுத்து என்பவா் அதிகபட்சமாக ரூ.6,10,070/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளாா். திரு.பி. முருகேசன் என்பவா் ரூ.6,03,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளாா்.

தொடா்ந்து திரு.பி.முருகேசன் என்பவா் மேற்குறிப்பிட்ட இரண்டு ஏல இனங்களுக்கும் மறு ஏலத்திற்கான கட்டணங்களை செலுத்தி மறு ஏலம் நடத்த கேட்டுக்கொண்டதால் இவ்விரு இனங்களுக்கும் 23.3.2007ம் தேதியன்று மறு ஏலம் நடத்த தேதி நிா்ணயம் செய்யப்பட்டது. இந்நிலையில், ஏல இனம் 1-க்கான மறு ஏலத்தினை எதிா்த்து திரு. மா.மகுடபதி என்பவா் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் O.S. எண். 673/07-ன்படி வழக்கினை தொடுத்து அதில் I.A. எண். 743/07-ன்படி இடைக்கால தடையுத்திரவினையும் பெற்றாா்.

ஏல இனம் 12க்கான மறு ஏலத்தினை எதிா்த்து திருமதி. எஸ். மாரிமுத்து என்பவா் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் O.S. எண். 673/07-ன்படி வழக்கினை தொடுத்து அதில் I.A. எண். 743/07-ன்படி இடைக்கால தடையுத்திரவினையும் பெற்றாா்.

இதன்பின்பு மறு ஏலம் கோரி விண்ணபித்த திரு. பி. முருகேசன் என்பவா் சமா்பித்த விண்ணப்பித்தில் தனக்கு தற்போது மறு ஏலத்தில் விருப்பம் இல்லையெனவும் தான் செலுத்திய தொகைகளை திரும்பு வழங்குமாறும், இது தொடா்பாக எவ்வித நடவடிக்கையம் தொடரமாட்டேன் எனவும் தெரிவித்திருந்தாா்.

மேலும் திரு. மா. மகுடபதி மற்றும் திருமதி. எஸ். மாரிமுத்து ஆகியோா் சமா்பித்த விண்ணப்பங்களில் தற்போது மறு ஏலத்திற்கான வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் உச்சக்கேள்விதாரா்களான தங்களுக்கு கோரியுள்ள ஏல இனங்களின் உரிமைகளை ஒப்படைக்கும் பட்சத்தில் தாம் தொடுத்துள்ள வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்வதாக தெரிவித்தனா்.

இப்பொருள் தொடா்பாக மாநகராட்சி வழக்குரைஞரது கருத்து கோரப்பட்டதில் திரு. முருகேசன் என்பவா் சுயமாக சமா்ப்பித்துள்ள விண்ணபத்தில் தனக்கு மறு ஏலத்தில் கலந்து கொள்வதற்கு விருப்பம் இல்லையென தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் தற்போது மறு ஏலம் என்கிற நிலைக்கு வாய்ப்பில்லாததாலும் திரு. மா. மகுடபதி மற்றும் திருமதி. எஸ். மாரி முத்து ஆகியோரது ஏலத்தொகையே உயா்ந்த கேள்வியாக உள்ளதாலும் மேற்படி உயா்ந்தபட்ச கேள்விதாரா்களான திரு. மா. மகுடபதி மற்றும் திருமதி. எஸ். மாரிமுத்து ஆகியோா் வசம் முறையே ஏல இனம் 1 மற்றும ஏல இனம் 12-ன் உரிமையை ஒப்படைக்கவும் மறு ஏலத்திற்கான செலவினை மேற்படி உச்சக்கேள்விதாரா்கள் வசமே வசூல் செய்து கொள்ளுமாறும் திரு. முருகேசன் என்பவா் மறு ஏலத்திற்காக செலுத்தியுள்ளதொகையினை

திருப்பி வழங்கலாம் எனவும் கருத்துரை வழங்கியதை தொடர்ந்தும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை 2006-2007ன் உரிமை தொகையைக்காட்டிலும் அதிகமாகவும் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி தொகையைக் காட்டிலும் கூடுதலாக உள்ளதாலும் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு காலதாமதம் ஆகும் பட்சத்தில் துறைமூலம் வசூல் செய்ய நேர்ந்தால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் அவசர அவசியம் கருதி உயர்ந்தபட்ச கேள்விதாரர்களான திரு.மா.மகுடபதி (ஏல இனம் எண்.1) மற்றும் திருமதி. எஸ். மாரிமுத்து (ஏல இனம் 12) ஆகியோருக்கு வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று உரிய தொகைகளை செலுத்தியபின் ஒப்படைசெய்யப்பட்டுள்ளது.

ஏல இனம் 13 காந்திபார்க் மின்கார் அமைத்து கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 26.2.2007, 8.3.2007, 23.3.2007 மற்றும் 27.3.2007 ஆகிய தேதிகளில் ஏலம் , ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எனினும் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. இவ்வினத்திற்கு மேற்கொண்டு மறு ஏலம் கோரினாலும் யாரும் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோர முன்வரமாட்டார்கள் என கருத வேண்டியுள்ளதால், மேற்படி இனத்தை குத்தகை இனங்களின் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யலாம்.

எனவே ஏல இனம் 1 மற்றும் 12 உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கவும், ஏல இனங்கள் குறித்த நாளிதழ் விளம்பர செலவினங்களை ஏற்கவும், ஏல இனம் எண்.13ஐ குத்தகை இனங்கள் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 177/2007/அ1/மே.

## மாமன்ற தீர்மான எண் 56 நாள் 23.07.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

ஸ்ரீ தேவி நகர் குடியிருப்போர் நல சங்கத்தினர் பொது ஒதுக்கீடுகள் குறித்து தொடுத்த சென்னை உயர் நீதி மன்ற வழக்கு எண்.156/2000 மற்றும் 45/2003-ல் 12.4.2007-ம் தேதிய நீதி மன்ற உத்தரவில் பொது ஒதுக்கீடு இடம் ஒதுக்கப்பட்டு, அது எந்த பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டதோ, அந்த பயன்பாட்டுக்கே அதனை உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்றும், பயன்பாட்டிற்கு மாறாக வேறு உபயோகத்திற்குள் இருந்தால், பொதுநலக்காவலன் என்ற அந்தஸ்த்தில் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சி பாதுகாக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் பல்வேறு மனைப்பிரிவுகளில் உள்ள பொது ஒதுக்கீடுகள் அந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்தாமல் மனைப்பிரிவு உரிமையாளர்களால் மாற்று உபயோகங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, ஆறு மாதங்களுக்குள் அனைத்து பொது ஒதுக்கீடு இடங்களையும் ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்கு உண்மையாக மாற்றி அதன் உரிமையாளர்கள் மாநகராட்சிக்கு தெரிவிக்குமாறும், தவறும்பட்சத்தில் மாநகராட்சி பொதுமக்களின் பொதுநலக் காவலன் என்கிற முறையில் அனைத்து பொது ஒதுக்கீடுகளையும் மாநகராட்சி தன் பராமரிப்பில் எடுத்துக் கொண்டு, பொது ஒதுக்கீடுகளை அதன் பயன்பாட்டிற்கே பயன்படுத்தலாம்.

மேற்படி சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, கோயம்பத்துர் மாநகராட்சியால் உள்ள பொது உபயோக இடங்களை அதன உரிமையாளர்கள் ஆறுமாத காலத்திற்குள் அதன் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துமாறும், தவறும்பட்சத்தில் அவைகளை மாநகராட்சி தனது பராமரிப்பில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது பற்றிய சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு மாநகர மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு . பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண் . 11803/07/MH5.

## மாமன்ற தீர்மான எண் 57 நாள் 23.07.07

உயர்நீதிமன்ற உத்தரவினை பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

பொருள் : மேற்கு மண்டலம் - பூ மார்க்கெட் மேடை கடைகளுக்கான பொது ஏலத்தினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகள் - உயர்நீதி தொடரப்பட்ட வழக்குகள் - உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் திரு. G. மாசிலாமணி அவர்கட்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்குதல் - தொடர்பாக.

- - - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், பூ மார்க்கெட்டில் புதியதாக கட்டப்பட்ட மேடை கடைகளை பொது ஏலத்தில் விடுவதை எதிர்த்து வியாபாரிகளால் 72 உயர் நீதி மன்ற வழக்குகள், உயர்நீதிமன்றத்தில் வெவ்வேறு மன்றங்களில் தொடரப்பட்டிருந்தது. அவசர அவசியத்தினை முன்னிட்டு தற்போதைய உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞரும், முன்னாள் இந்திய உச்ச நீதிமன்ற **Additional Solicitor General of India**-வும் ஆன திரு. G. மாசிலாமணி அவர்களால் மேற்படி வழக்குகள் யாவும் ஒன்று திரப்பட்டு ஏற்கனவே உயர்நீதிமன்ற இரண்டாவது **Division Bench**–ல் நிலுவையில் இருந்த அவமதிப்பு வழக்கு 505/05 உடன் இணைத்து நடத்தப்பட்டது.

கடந்த 30.6.2006-ம் தேதியன்று உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த W.P. எண். 27954,05 முதலான 72 வழக்குகளில் 67 வழக்குகள் ஒட்டு மொத்தமாக மாநகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டது. பின்பு கடந்த 30.11.2006 அன்று மாநகராட்சியால் அவமதிப்பு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட உறுதியுரை நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுவும் முடித்து வைக்கப்பட்டது. தற்போது மேடைகளை பொது ஏலத்தில் ஒதுக்கீடு செய்யும் பணி நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில் மூத்த வழக்கறிஞர் திரு. G. மாசிலாமணி அவர்கள் வசமிருந்து மேற்படி 67 உயர்நீதிமன்ற வழக்குகள் மற்றும் அவமதிப்பு வழக்கிற்கும் சேர்ந்து மொத்தமாக ரூ.2,15,000/- வழக்கறிஞர் கட்டணமாக கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாமன்ற தீர்மானம் எண். 250/16.12.2005-ன்படி மூத்த வழக்கறிஞர் திரு.G.மாசிலாமணி அவர்கள் அவமதிப்பு வழக்கில் ஆஜராகவும் ரூ.30,000/- ம் முன்பணம் வழங்கவும் அனுமதிக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி அனைத்து வழக்குகளிலும் மாநகராட்சி வழக்கறிஞரோடு உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் திரு.G.மாசிலாமணி அவர்கள் ஆஜரானதினை அனுமதித்தும், எஞ்சிய வழக்கறிஞர் கட்டணங்கள் ரூபாய் 1,85,000/- அவருக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி கோரி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 505/05/C2/W.

### மாமன்ற தீர்மான எண் 58 நாள் 23.07.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

சென்னை உயர் நீதி மன்ற வழக்கு எண். 156/2000 மற்றும் 45/2003 -ல், 12.4.2007 -ம் தேதிய உத்திரவில், உள்ளாட்சிகளில் உள்ள பொது ஒதுக்கீடுகள் எந்த பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டதோ, அந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல், மனைப்பிரிவு உரிமையாளர்களால் மாற்று உபயோகங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருமேயானால் குறிப்பிட்ட கால வரைக்குள் உண்மையான ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்ய வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் பொதுமக்களின் பொது நலக் காவலன் என்ற அந்தஸ்தில் அப்-பொது ஒதுக்கீடு இடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் தன் பராமரிப்பில் எடுத்துக் கொண்டு, அந்த பயன்பாட்டிற்கு அபிவிருத்தி செய்யலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சி, தெலுங்குபாளையம் கிராமம் மற்றும் சங்கனூர் கிராமத்தில் உள்ள க.ச. எண். 535/1, 535/2 மற்றும் 322/பாகம், 411/பாகம், 412/பாகம் -ல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் 61.40 சென்ட் பொது ஒதுக்கீடு இடம் இராமலிங்க நகர் கூட்டுறவு சங்கத்தினரிடம் உள்ளது.

மேற்படி பொது ஒதுக்கீடு இடம் மனைப்பிரிவில் குழந்தைகள் விளையாடுமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தினை இராமலிங்க கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தினரால் பராமரிப்பு செய்யப்படாமல் பல வருடங்களாக தரிசு நிலமாக, குப்பை கொட்டுமிடமாக உள்ளது. அதனை தற்போது குடியிருப்போர் நல சங்கமும் மற்றும் மாநகராட்சியும் தான் பராமரித்து வருகிறது. மேற்படி பொது ஒதுக்கீட்டு இடத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைக்குமாறு இராமலிங்க நகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தை மாநகராட்சியால் பலமுறை முயற்சித்து இதுவரை பொது ஒதுக்கீட்டு இடத்தை மேற்படி வீடு கட்டும் சங்கத்தினர் பராமரிக்கவில்லை மாநகராட்சியிடமும் ஒப்படைக்கவில்லை.

எனவே, மேலே குறிப்பிட்ட சென்னை உயர்நீதி மன்ற உத்தரவுப்படி, அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பல வருடங்களாக பராமரிப்பின்றி உள்ள மேற்படி குழந்தைகள் விளையாடுமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, இராமலிங்க நகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தினர் வசம் உள்ள இடத்தினை மாநகராட்சி பராமரிப்பில் அபிவிருத்தி செய்வது குறித்து மாநகரமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. அங்கீகரிக்கப்பட்ட இராமலிங்க நகர் மனைப்பிரிவின் பொதுத் திறவிடத்தை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி மாநகராட்சியால் பராமரிப்பு செய்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடலாம் என தீர்மானிக்கலாம்.

ந.க. எண் 10215/2007/MH5.

**மாமன்ற தீர்மான எண் 59 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

கோவை மாநகராட்சி உடையாம்பாளையம் மேல்நிலைப்பள்ளி, கணித பட்டதாரி ஆசிரியை செல்வி எஸ். அனிதா அவர்களும், மதுரை மாநகராட்சி ஈ.வெ.ரா. நாகம்மையார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கணிதப் பட்டதாரி ஆசிரியை திருமதி வை. கீதாயஜ்ஞவல்லி அவர்களும் மனமொத்த இடமாறுதல் கோரியுள்ளனர்.

ஆசிரியைகளின் விண்ணப்ப படிவங்களை பரிந்துரை செய்து, நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுச் செயலர், பள்ளி கல்வித்துறை அவர்களுக்கு அனுப்ப அனுமதி கோரி கல்விக்குழுவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க. எண் **10680/06/ கே 7**

**மாமன்ற தீர்மான எண் 60 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

பொருள் - வருவாய் கோட்டாட்சியர், கோவை, அவர்களின் ந.க.எண். 14630 / 05 ஆ4, நாள் 23.04.2007-ல் கோவை தெற்கு வட்டம் குமாரபாளையம் கிராமம் புல எண் 182 /2 –இல் 0.07 1/4 செண்ட் கொண்ட பூமியை பி-10 காவல் நிலையம் அமைக்கும் பொருட்டு காவல் துறையினருக்கு நிலமாற்றம் செய்து தர மாநகராட்சியின் தீர்மானத்தினை அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளார்.

நகரசார் ஆய்வார் (மேற்கு) அவர்களது 25.05.07 நாளிட்ட குறிப்பில், மேற்படி நிலம் சாரமண் கலர் என்ற வகைப்பாட்டில் வருவாய்த்துறை கட்டுப்பாட்டில் உள்ள இடம் என குறிப்பிட்டு உள்ளார்.

எனவே மேற்படி இடம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதாலும் மாநகராட்சியின் வளர்ச்சி பணிகளுக்கு தேவையில்லை என்பதாலும் பி-10 காவல் நிலையம் அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று வழங்க மாமன்றத்தின் முடிவுக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -
ஆட்சேபனையின்மை சான்று வழங்கலாம். ந.க.எண் **5228/2007/ எச் 1**(மே)

---

## பொருள் எண் 21

பொருள் - மேடைக்கடைகள் மேட்டுப்பாளையம் ரோடு பன்னீர்செல்வம் பூமார்க்கெட் மேடைக்கடைகள் ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்தல் - தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பன்னீர்செல்வம் பூ மார்க்கெட்டில் ஏற்கனவே இருந்த தரைக் கடைகளை மாற்றி புதிய சிமெண்ட ஷீட் கூரை வேய்ந்த 144 மேடைக்கடைகள் கட்டப்பட்டது. இது முந்தைய உயர்நீதிமன்ற தீர்ப்பு W.P. No. 12892/02 நாள் 22.9.2003-ன்படி ஏற்கனவே வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்பின்பு உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் மேல்முறையீடு வழக்கு எண் W.A. No. 3816/03-ல் கடந்த 21.6.2005-ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், ஒதுக்கீடு உத்தரவுகள் ரத்து செய்யப்பட்டு மேடைக்கடைகள் பொது ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனை எதிர்த்து வியாபாரிகள் மாவட்ட நீதிமன்றத்திலும் உயர்நீதி மன்றத்திலும் தடை உத்தரவுகள் பெற்றதன் காரணமாக முதற்கட்டமாக 55 மேடைக்கடைகளுக்கு மட்டுமே பொது ஏலம் நடத்த இயன்றது. அதில் 16 மேடைக்கடைகள் ஏலதாரர்களால் எடுக்கப்பட்டது. அவற்றில் 3 கடைகளுக்கான ஏலதாரர்கள் வழக்குகள் தொடுத்துள்ளனர். ஏனைய 13 ஏலதாரர்கள் அதிக வாடகை வைத்து எடுத்துள்ள காரணத்தால் வாடகையை செலுத்த இயலாத நிலையில் நிலுவை வைத்துள்ளனர். அதன்பின்பு தொடர்ந்து நடந்த ஏலங்களில் மேலும் 11 கடைகள் ஏலத்தில் எடுக்கப்பட்டது. ஆனால் யாரும் வருட வாடகையினை செலுத்தி பொறுப்பினை ஏற்க முன்வராததால் இவர்கள் செலுத்திய தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருந்த பொது ஏலத்திற்கு எதிரான அனைத்து வழக்குகளும் கடந்த 30.6.2006-ம் தேதியன்று முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அதன் அடிப்படையில் மொத்தமுள்ள 144 மேடைக்கடைகளில் ஏற்கனவே பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட 16 மேடைக்கடைகள் நீங்கலாக எஞ்சிய 128 மேடைக்கடைகளில் 28 மேடைக்கடைகளுக்கு 4 முறை பொது ஏலம் நடத்தப்பட்டும் ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை. இதனை தொடர்ந்து 48-வது வார்டு மாமன்ற உறுப்பினர் தனது 10.1.2007-ம் தேதிய கடிதத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத்தொகை (ரூ.10,000/-) காப்புத்தொகை (ரூ.10000/-) மற்றும் சால்வன்சி தொகை (ரூ.20,000/-) ஆக மொத்தமாக ரூ.40,000/- என உள்ளதை ரூ.20,000/- என குறைத்து அனுமதி வழங்கினால் பொது ஏலத்தில் கலந்து கொள்வார்கள். என கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி தொகை ரூ.40,000/- ஐ வைப்புத்தொகை (ரூ.7,500/-) காப்புத்தொகை (ரூ.7,500/-) மற்றும் சால்வன்சி தொகை (ரூ.10,000/-) என ரூ.25,000/-ஆக குறைக்கப்பட்டது. எனினும் தொடர்ந்து 26.3.2007-ல் நடைபெற்ற ஏலத்திலும் யாரும் கலந்து கொள்ளவில்லை.

உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் 30.6.2006-ல் வழங்கிய தீர்ப்பின்படி 128 மேடைக்கடைகளுக்கும் தொடர்ந்து பொது ஏலம் நடத்தியும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. இதனால் மாநகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் 4.4.2007-ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லையெனினும் 95 மேடைக்கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டன. அதன் உச்ச ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் மற்றும் தினசரி வாடகை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | கடை எண் | பெயர் | தினசரி வாடகை உச்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | A2 | திரு. எஸ். நந்தகுமார் | 100/- |
| 2 | A3 | திரு. எம். காஜாமைதீன் என்கிற சேட்டு | 70/- |
| 3 | A4 | திரு. ஜி. கீதா | 60/- |
| 4 | A5 | திரு. எஸ். ஷாஜஹான் | 60/- |
| 5 | A6 | திரு. வி.பி. நஞ்சப்பன் | 60/- |
| 6 | B10 | திருமதி. பி. ருக்மணி | 60/- |
| 7 | B11 | திரு. வி. பொன்மயில் | 60/- |
| 8 | B12 | திரு. ஆர். ராதாகிருஷ்ணன் | 60/- |
| 9 | B13 | திரு. எ. உம்மர் ஷத்தப் | 30/- |
| 10 | B14 | திரு. பி. ஜெயக்குமார் | 45/- |

| | | | |
|---|---|---|---|
| **11** | **B16** | திரு. பி. ராதாகிருஷ்ணன் | **60/-** |
| **12** | **C17** | திருமதி. வள்ளியம்மாள் | **60/-** |
| **13** | **C18** | திருமதி. என். வசந்தி | **60/-** |
| **14** | **C19** | திரு. டி. கணேசன் | **60/-** |
| **15** | **C20** | திரு. டி. என். முத்துராமன் | **60/-** |
| **16** | **C23** | திரு. எஸ். சம்பத்குமார் | **60/-** |
| **17** | **C25** | திரு. பி. புவியரசு | **60/-** |
| **18** | **C28** | திரு. வி.கே.சண்முகம் | **60/-** |
| **19** | **D29** | திரு. கே. சண்முகம் | **30/-** |
| **20** | **D31** | திரு. கே.எம். இஸ்மாயில் | **30/-** |
| **21** | **D33** | திரு. ஆர். செல்வராஜ் | **30/-** |
| **22** | **D34** | திரு. வி.பி. குமாரசாமி | **30/-** |
| **23** | **D35** | திரு. எ. பாரூக் | **30/-** |
| **24** | **D36** | திரு. வி. கே. மருதாசலம் | **30/-** |
| **25** | **D37** | திரு. ஜி. ஷேக் அலாவூதீன் | **30/-** |
| **26** | **D38** | திரு. எம். காதர்பாட்ஷா | **30/-** |
| **27** | **D39** | திரு. சி. அப்துல் ரகுமான் | **30/-** |
| **28** | **D40** | திரு. எ. அன்சாரி | **30/-** |
| **29** | **E41** | திரு. என். குருசாமி | **30/-** |
| **30** | **E43** | திரு. பி. சுந்தரசாமி | **30/-** |
| **31** | **E44** | திரு. எம். கே. செரீப் | **30/-** |
| **32** | **E45** | திரு. வொய். அப்துல் அமீது | **30/-** |
| **33** | **E46** | திரு. ஆர். கோவிந்தராஜ் | **30/-** |
| **34** | **E47** | திரு. ஆர். கோவிந்தராஜ் | **30/-** |
| **35** | **E48** | திரு. எ.ஹக்கீம் | **40/-** |
| **36** | **E49** | திரு. எஸ். நூர் முகமது | **30/-** |
| **37** | **E50** | திரு. எ. வெங்கடேஷ் | **30/-** |
| **38** | **E51** | திரு. எ. என். சக்திவேல் | **30/-** |
| **39** | **E52** | திரு. எ. என். துரைசாமி | **30/-** |
| **40** | **E53** | திரு. எ. எஸ். மோகனசுந்தரம் | **30/-** |
| **41** | **E54** | திருமதி. ஜி. பாத்திமா பீபீ | **30/-** |
| **42** | **E55** | திரு. அக்பர் | **30/-** |
| **43** | **F57** | திரு. எஸ். சரவணன் | **55/-** |
| **44** | **F58** | திரு. எ. பி. ஆறுச்சாமி | **50/-** |
| **45** | **F59** | திரு. எ. அப்துல் ஜப்பார் | **25/-** |
| **46** | **F60** | திரு. டி. அசோக்குமார் | **25/-** |
| **47** | **F61** | திரு. என். நட்ராஜ் | **25/-** |
| **48** | **F62** | திரு. ஆர். பாலகணேஷன் | **25/-** |
| **49** | **F64** | திரு. இ. அப்துல் ஹைப் | **25/-** |
| **50** | **F66** | திரு. எ. முஸ்தபா | **25/-** |
| **51** | **F69** | திரு. ஜி.வி. ராம்தாஸ் | **25/-** |
| **52** | **F71** | திரு. எ. எஸ். ரங்கநாதன் | **25/-** |
| **53** | **G77** | திரு. ஆர். வேலுமணி | **25/-** |
| **54** | **G78** | திரு. பி. பாலு | **25/-** |
| **55** | **G79** | திரு. எஸ். வித்தியாசாகர் | **25/-** |
| **56** | **G80** | திருமதி. ஆர். உமாமகேஸ்வரி | **25/-** |
| **57** | **G82** | திரு. டி. சேகர் | **25/-** |

| | | | |
|---|---|---|---|
| 58 | H89 | திரு. எம். சண்முகநாதன் | 25/- |
| 59 | H91 | திரு. எ. வி. சண்முகசுந்தரம் | 25/- |
| 60 | H99 | திரு. கே. எம். இஸ்மாயில் | 25/- |
| 61 | H100 | திரு. எம். பாலு | 25/- |
| 62 | H101 | திருமதி. கே. பத்மாவதி | 25/- |
| 63 | H102 | திரு. என். சக்கீல் | 25/- |
| 64 | H103 | திரு. எம். முஹம்மது ரபீக் | 25/- |
| 65 | H104 | திரு. எம். முஹம்மது அஸ்ரப் | 25/- |
| 66 | I 105 | திரு. பி. கணேசன் | 25/- |
| 67 | I 106 | திரு. எ. என். சந்திரசேகரன் | 25/- |
| 68 | I 107 | திரு. பி. மணியன் | 25/- |
| 69 | I 108 | திருமதி. எ. மரகதம் ஜெயலட்சுமி | 25/- |
| 70 | I 112 | திரு. எம். உஸ்மான் பீர் | 25/- |
| 71 | I 113 | திரு. எஸ். முருகேசன் | 100/- |
| 72 | I 114 | திரு. ஜி. கோவிந்தராஜ் | 75/- |
| 73 | I 115 | திரு. எம். சகாபுதீன் | 25/- |
| 74 | I 116 | திரு. எஸ். விஜயகுமார் | 25/- |
| 75 | I 118 | திரு. என். சண்முகம் | 25/- |
| 76 | I 119 | திரு. வி. சுந்தரம் | 25/- |
| 77 | I 120 | திரு. கே. எம். உசேன் | 25/- |
| 78 | I 121 | திரு. வி.என். கந்தசாமி | 25/- |
| 79 | I 122 | திரு. எஸ். முகம்மது கனி | 25/- |
| 80 | I 123 | திரு. பா. தமிழரசு | 25/- |
| 81 | I 124 | திரு. எஸ். சாலுதீன் | 25/- |
| 82 | J125 | திரு. பி. சிவகுமார் | 25/- |
| 83 | J126 | திரு. எ. பக்கீர் முஹம்மது | 25/- |
| 84 | J128 | திரு. எம். அப்துல் அஜீஸ் | 25/- |
| 85 | J130 | திரு. எஸ். தம்பியப்பா | 25/- |
| 86 | J131 | திரு. பி. கிருஷ்ணமூர்த்தி | 25/- |
| 87 | J132 | திரு. எ. ரங்கநாதன் | 25/- |
| 88 | J134 | திரு. எம். எ. யூசுப் | 25/- |
| 89 | J135 | திரு. ஆர். ராமசாமி | 25/- |
| 90 | J136 | திருமதி. ஆர். உமாமகேஸ்வரி | 25/- |
| 91 | J137 | திரு. டி. செந்தில்குமார் | 25/- |
| 92 | J138 | திரு. எம். பழனிசாமி | 25/- |
| 93 | J139 | திரு. வி. கேசவன் | 25/- |
| 94 | J140 | திருமதி. எ. ஆர். பாக்கியம் | 25/- |
| 95 | J144 | திரு. எஸ். சின்னசாமி கவுடர் | 25/- |

4.4.2007-ம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள மேடைக்கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் கடை நடத்த விருப்பமில்லையெனவும் விண்ணப்பத்தில் தவறுதலாக தொகையை குறிப்பிட்டுள்ளதாகவும், கடை வேண்டாம் என விலகுவதாகவும் தெரிவித்தவர்கள் பின்வருமாறு :

| வ. எண். | கடை எண் | பெயர் | ஒப்பந்தப்புள்ளி தினசரி வாடகை தொகை ரூ. | குறிப்பிட்டுள்ள காரணம் |
|---|---|---|---|---|
| 1 | A2 | திரு. எம். காஜாமைதீன் | 120 | கடை நடத்த விருப்பம் இல்லை |
| 2 | A3 | திரு. எம். சரவணன் | 70 | கடை நடத்த விருப்பம் இல்லை |
| 3 | A5 | திரு. எஸ். ராஜமாணிக்கம் | 501 | தவறுதலாக தொகை குறிப்பிட்டுள்ளதால் விலகுவதாக தெரிவித்துள்ளார். |
| 4 | A5 | திரு. கே. ஸ்ரீதர் | 95 | -do- |
| 5 | A6 | திரு. எஸ். கந்தவேல் | 301 | -do- |
| 6 | A6 | திரு. ஜி. சண்முக சுந்தரம் | 75 | -do- |
| 7 | E41 | திரு. வெ. தண்டபாணி | 40 | கடை நடத்த விருப்பம் இல்லை |
| 8 | E49 | திரு. வெ. தண்டபாணி | 45 | -do- |
| 9 | E55 | திரு. எம். சரவணன் | 50 | -do- |

மேற்குறிப்பிட்ட நபர்கள் செலுத்தியுள்ள வைப்பு மற்றும் காப்புத்தொகைகளை பறிமுதல் செய்யலாம்.

எனவே இவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள உயர்ந்தபட்ச கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிதாரர்களை பட்டியலில் சேர்க்கலாம்,

| வ. எண். | கடை எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | தினசரி வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1 | A2 | திரு. எஸ். நந்தகுமார் | 100/- |
| 2 | A3 | திரு. எம். காஜாமைதீன் என்கிற சேட்டு | 70/- |
| 3 | A5 | திரு. எஸ். ஷாஜஹான் | 60/- |
| 4 | A6 | திரு. வி.பி. நஞ்சப்பன் | 60/- |
| 5 | E41 | திரு. என். குருசாமி | 30/- |
| 6 | E49 | திரு. எஸ். நூர் முகமது | 30/- |
| 7 | E55 | திரு. அக்பர் | 30/- |

மேற்படி மேடைக்கடைகள் அனைத்தும் 5'X4'=20 ச.அடி கொண்டவையாகும். தற்போது ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட கடைகள் யாவும் சாலைக்கு மிகவும் பின்புறமாக உள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி தொகைகள் தனியார் கடைகளின் வாடகையினை காட்டிலும் மிக அதிமாக உள்ளது.

மேலும் கடைகளை கட்டுவதற்கு மட்டுமின்றி இப்பொருள் தொடர்பான மிக அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை நடத்தி மாநகராட்சி அதிக செலவுகள் செய்து முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாலும் கடந்த 20 மாதங்களாக மேடைக்கடைகள் ஏலத்தில் போகாததால் ஏற்பட்ட நஷ்டத்தினாலும் மாநகராட்சிக்கு பெரும் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவைகளை கருத்தில் கொண்டு தற்போது ஒப்பந்தப்புள்ளிதாரர்களால் குறிப்பிட்டுள்ள தொகை தனியார் கடை வாடகையினை காட்டிலும் அதிகமாக உள்ளதால் பட்டியலில் கண்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு கடைகளை ஒப்படைக்கலாம்.

கடை எண். A2, A3, A5, A6, E41, E49 மற்றும் E55 ஆகியவற்றிற்கு உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்து கடைநடத்த விருப்பமில்லையென விலகியவர்களின் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகைகளை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் சேர்க்கலாம்.

இவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிதாரர்களை பட்டியலில் சேர்க்கலாம்.

எஞ்சிய 33 மேடைக்கடைகளுக்கு மீண்டும் பொது ஏலம் நடத்தலாம்.

இப்பொருள் குறித்து நாளிதழ்களில் விளம்பரம் செய்ய ஆகும் செலவு தொகையை ஏற்கலாம்.

வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 6 நாள் 21.6.2007-ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட பொருள் மாமன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 12173/2001/ அ1 மே.

**மாமன்ற தீர்மான எண் 62 நாள் 23.07.07**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 21.6.07 ம் தேதிய தீர்மான எண் 6.ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள் : அனுமதி – வார்டு எண். 35 – காமராஜபுரம் - துப்புரவு பணியாளர்கள் காலனி – மாநகராட்சி கட்டிட அறையை Y.W.C.A. அமைப்பிற்கு 1.4.2007 முதல் 31.3.2010 முடிய அனுமதி நீடித்து. 15% வாடகை உயர்வு செய்து நிர்ணயித்தல் - சம்பந்தமாக.

- - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் காமராஜபுரம் துப்புரவு பணியாளர் காலனியில் உள்ள மாநகராட்சி கட்டிட அறையை Y.W.C.A. அமைப்புக்கு பொதுமக்கள் சமூக நலனுக்காக பயன்படுத்த மாதவாடகை ரூ.606/- என்ற அடிப்படையில் ஏப்ரல் 2004 முதல் மார்ச் 2007 முடிய 3 ஆண்டுகளுக்கு மாமன்ற தீர்மான எண். 215 நாள் 29.11.2004ன்படி அனுமதித்து உரிமம் வழங்கப்பட்டது. இதன் உரிம காலம் 31.3.2007 ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

Y.W.C.Aயின் பொது மேலாளர் இக்கட்டிடத்தை சமுதாயத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மேலும் 3 ஆண்டுகளுக்கு பயன்படுத்திக்கொள்ள அனுமதி கேட்டு 3.2.2007-ல் விண்ணப்பித்துள்ளார்.

அரசாணை எண். (இருபதாண்டுகள்) 147 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 30.12.2000-ல் 3 ஆண்டுகள் உரிம காலம் முடிந்த இனங்களுக்கு மறு ஏலம் விடுவதை தவிர்த்து ஏற்கனவே இருந்த வாடகையில் குறைந்தபட்சமாக 15% கூடுதலாக வாடகை இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டிடத்தை Y.W.C.A. அமைப்புக்கு 1.4.2007 முதல் 3 ஆண்டுகள் உரிமத்தை நீடிக்கவும் அதற்கான மாத வாடகையை அரசானையின்படி 15% உயர்வு செய்து நிர்ணயிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவுக்குள் பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.27 நாள் 7.5.2007-ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே காமராஜபுரம் துப்புரவு பணியாளர் காலனியில் உள்ள மாநகராட்சி கட்டிடத்தின் அறையை 1.4.2007 முதல் 31.3.2010 முடிய 3 ஆண்டுகளுக்கு உரிமத்தை நீடிக்கவும் அதற்கான மாத வாடகை ரூ.606/-லிருந்து 15% உயர்வு செய்து ரூ.697/-ஆக நிர்ணயம் செய்யவும் மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க. எண். 1405/2007/அ1 மே.

**மாமன்ற தீர்மான எண் 63 நாள் 23.07.07**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 7.5.2007 ம் தேதிய தீர்மான எண் 27.ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்: 23**

முதன்மைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் ( பொது ) நீர் நிலை ஆதாரம் , பொதுப் பணித்துறை அவர்களின் கடித எண் HDO / 31257 / 2004-1 தேதி 17-04-2007 மற்றும் முதன்மைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் ( பொது ) நீர் நிலை ஆதாரம் பொதுப் பணித்துறை அவர்களின் கடித எண் HDO / 31257 / 2004-2 தேதி 17-04-2007 களில் முறையே சிமெண்ட் மற்றும் கம்பிகள் விலை உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்பார்வை பொறியாளர் பவானி வடிகால் வட்டம் பொதுப் பணித்துறை , நீர் நிலை ஆதாரம் அவர்களின் கடித எண்TS/ JDO/ F 71B/ 110 M / 2007 தேதி 25-04-2007 ஏனைய கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் கூலிகள் உயர்த்தி நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் இவ்வுயர்த்தப்படட கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் கூலிகள் 1-04-2007 முதல் அமுலுக்கு வருவதாகவும் மேற்குறிப்பிட்டுள்ள கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கட்டுமானப் பொருட்களின் விலை விபரங்கள் மற்றும் தொழிலாளர்களின் கூலி விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண் 10385/ 2006 / தொ.நு.உ.(தெ)

**மாமன்ற தீர்மான எண் 64 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் : 24**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 41க்குட்பட்ட உக்கடம் பகுதியில் மீன், மட்டன் மற்றும் கோழி இறைச்சிக்கடைகளுடன் கூடிய சந்தை கட்டும் பணிக்கு அரசு ஆணை 60 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 19-05-2005 ன் படி ரூ. 1,25,00,000 /- க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு முதல் இரு முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் யாது ஒருவரும் பங்கேற்க வில்லை எனவே மூன்றாவது முறையாக நடப்பு ஆண்டு 2007-2008 விலை விவரப் பட்டியல் படி மதிப்பீடு திருத்தப்பட்டு மாமன்ற தீர்மான எண் 181 நாள் 14-09-2006 ன் படி திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,37,00,000-க்கு ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது ஆனால் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியானது ஒப்பந்த அறிக்கையின் படி வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அவ்வொப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு நான்காவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன விபரம் பின்வருமாறு.

1. திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) - 4.86 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகம்
   பிரைவேட் லிமிடெட்
2. திருவாளர். சி.டி. ராமநாதன் அன் கோ - 6.46 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகம்

பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்களின் விலைப்புள்ளியினை 2006-2007 ம் ஆண்டு விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் 11.70% மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாகவும் 2007-2008 ம் ஆண்டு விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் 4.86 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாகவும் உள்ளது.

மேலும் இப்பணியினை நடப்பு நிதியாண்டில் செய்து முடிப்பதாக தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது எனவே மாநகர உட்கட்டமைப்பினை தரம் உயர்த்தும் நோக்கிலும் பொது மக்களின் நலன் கருதியும் இப்பணியினை நடப்பு ஆண்டிலேயே செயல்படுத்தி முடிக்க வேண்டியது அவசர அவசியமாகிறது.

எனவே பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்களின் 4.86 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணியினை அவர்களுக்கு வழங்கவும், திருத்திய

மதிப்பீட்டுத் தொகையான ரூ. 1,37,00,000/- க்கு நிர்வாக அனுமதி தமிழக அரசிடம் கோரவும், ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவில் முடிவு செய்யப்பட்டு பொருள் மாமன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6087/2007/எம்.டி.3

**மாமன்ற தீர்மான எண் 65 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் : 25**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 48 க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் பூமார்க்கெட் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை எண் 35696/2004/எம்.சி.பி.1 நாள் 10-09-2004 ன் படி ரூ. 80,15,000 /- க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு முதல் இரு முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் யாது ஒருவரும் பங்கேற்க வில்லை எனவே மூன்றாவது முறையாக நடப்பு ஆண்டு 2007-2008 விலை விவரப் பட்டியல் படி மதிப்பீடு திருத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன விபரம் பின்வருமாறு.

1. திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் - 4.81 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகம்

2. திருவாளர். சி.டி. ராமநாதன் அன் கோ - 5.81 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகம்

பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்களின் விலைப்புள்ளியினை 2006-2007 ம் ஆண்டு விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் 11.09 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாகவும் 2007-2008 ம் ஆண்டு விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் 4.81 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாகவும் உள்ளது.

மேலும் இப்பணியினை நடப்பு நிதியாண்டில் செய்து முடிப்பதாக தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது எனவே மாநகர உட்கட்டமைப்பினை தரம் உயர்த்தும் நோக்கிலும் பொது மக்களின் நலன் கருதியும் இப்பணியினை நடப்பு ஆண்டிலேயே செயல்படுத்தி முடிக்க வேண்டியது அவசர அவசியமாகிறது.

எனவே பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்களின் 4.81 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணியினை அவர்களுக்கு வழங்கவும், திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,13,44,000/- க்கு நிர்வாக அனுமதி தமிழக அரசிடம் கோரவும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவில் முடிவு செய்யப்பட்டு பொருள் மாமன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5409/2007/எம்.டி.3

**மாமன்ற தீர்மான எண் 66 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் : 26**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 41க்குட்பட்ட உக்கடம் பகுதியில் பழம் மற்றும் காய்கறிக் கடைகளுடன் கூடிய சந்தை கட்டும் பணிக்கு அரசு ஆணை 62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 19-05-2005 ன் படி ரூ. 1,18,68,000 /- க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு முதல் இரு முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் யாது ஒருவரும் பங்கேற்க வில்லை எனவே மூன்றாவது முறையாக நடப்பு ஆண்டு விலை விவரப் பட்டியல் படி மதிப்பீடு திருத்தப்பட்டு மாமன்ற தீர்மான எண் 181 நாள் 14-09-2006 ன் படி திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,30,00,000/- க்கு ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது ஆனால் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியானது ஒப்பந்த அறிக்கையின் படி வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அவ்வொப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு நான்காவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன விபரம் பின்வருமாறு.

1. திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) - 4.88 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகம்
பிரைவேட் லிமிடெட்
2. திருவாளர். சி.டி. ராமநாதன் அன் கோ - 8.70 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகம்

பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்களின் விலைப்புள்ளியினை 2006-2007 ம் ஆண்டு விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் 11.65 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாகவும் 2007-2008 ம் ஆண்டு விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் 4.88 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாகவும் உள்ளது.

மேலும் இப்பணியினை நடப்பு நிதியாண்டில் செய்து முடிப்பதாக தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது எனவே மாநகர உட்கட்டமைப்பினை தரம் உயர்த்தும் நோக்கிலும் பொது மக்களின் நலன் கருதியும் இப்பணியினை நடப்பு ஆண்டிலேயே செயல்படுத்தி முடிக்க வேண்டியது அவசர அவசியமாகிறது.

எனவே பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான திருவாளர். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்களின் 4.88 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணியினை அவர்களுக்கு வழங்கவும், திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,30,00,000/- க்கு நிர்வாக அனுமதி தமிழக அரசிடம் கோரவும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவில் முடிவு செய்யப்பட்டு. பொருள் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6086/2007/எம்.டி.3

**மாமன்ற தீர்மான எண் 67 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் : 27

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண் 7 வார்டு எண் 23-க்குட்பட்ட ராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ. 24,70,000 ற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு , தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 11852 /2007 / எம்.டி.2

**மாமன்ற தீர்மான எண் 68 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் : 28

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண் 23-ல் உள்ள ராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்பறைகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ. 23,00,000 ற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் உள்ள வேதியியல் , இயற்பியல் மற்றும் கணினி அறைகள் பழுதடைந்தும் , பள்ளியின் சுற்றுச் சுவர் பல இடங்களில் உடைந்து கீழே விழும் அபாயத்திலும் உள்ளது. மேலும் இப்பள்ளி மாணவிகள் மதிய உணவு சாப்பிட வழியில்லாததாலும் , இது குறித்து இப்பகுதி மாமன்ற உறுப்பினர் விண்ணப்பித்துள்ளதாலும் உதவி நிர்வாகப் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு அவசர அவசியத்தை கருதி இம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

இப்பணிக்கு 2007-2008-ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 11853 /2007 / எம்.டி.2

**மாமன்ற தீர்மான எண் 69 நாள் 23.07.07**
அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண் 29

பொருள் - கோயம்புத்துார் மாநகராட்சி – அனைத்து வார்டு பகுதிகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் 2007 ம் ஆண்டின் கணக்கெடுப்பின் விபரம் தெரிவித்தல் - தொடர்பாக.

---------------

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண் 35681/2006/யுபிஎ 4, நாள் 12.1.2007 கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கோயம்புத்துார் மாநகராட்சி அனைத்து வார்டு பகுதிகளில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்கள் 59961 உள்ளது என பட்டியலில் வார்டு வாரியாக கணக்கிடப்பட்டுள்ளது. அதன் விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்காக வைக்கப்படுகிறது.

| வார்டு எண் | வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் எண்ணிக்கை | வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களின் மக்கள் தொகை |
|---|---|---|
| 1 | 584 | 2231 |
| 2 | 1045 | 4261 |
| 3 | 525 | 2095 |
| 4 | 1396 | 5404 |
| 5 | 1025 | 3871 |
| 6 | 1703 | 6356 |
| 7 | 774 | 2833 |
| 8 | 531 | 2259 |
| 9 | 1394 | 5353 |
| 10 | 787 | 3006 |
| 11 | 1159 | 4322 |
| 12 | 1012 | 4252 |
| 13 | 709 | 3231 |
| 14 | 1055 | 4025 |
| 15 | 1003 | 3871 |
| 16 | 603 | 2277 |
| 17 | 499 | 2104 |
| 18 | 783 | 3099 |
| 19 | 851 | 3483 |
| 20 | 1236 | 4671 |
| 21 | 1278 | 4976 |
| 22 | 734 | 2994 |
| 23 | 518 | 1964 |
| 24 | 270 | 1009 |
| 25 | 739 | 2914 |
| 26 | 243 | 938 |

| | | |
|---|---|---|
| 27 | 346 | 1426 |
| 28 | 349 | 1415 |
| 29 | 755 | 3092 |
| 30 | 938 | 3464 |
| 31 | 261 | 1021 |
| 32 | 579 | 2149 |
| 33 | 1344 | 5249 |
| 34 | 76 | 354 |
| 35 | 335 | 1338 |
| 36 | 1044 | 4255 |
| 37 | 433 | 1994 |
| 38 | 83 | 379 |
| 39 | 385 | 2107 |
| 40 | 114 | 585 |
| 41 | 798 | 3677 |
| 42 | 512 | 2276 |
| 43 | 1776 | 7572 |
| 44 | 378 | 1654 |
| 45 | 841 | 3492 |
| 46 | 76 | 295 |
| 47 | 469 | 1876 |
| 48 | 415 | 1829 |
| 49 | 88 | 379 |
| 50 | 511 | 2312 |
| 51 | 219 | 1008 |
| 52 | 641 | 2744 |
| 53 | 820 | 3806 |
| 54 | 2926 | 14932 |
| 55 | 1381 | 5707 |
| 56 | 1928 | 8758 |
| 57 | 1069 | 4143 |
| 58 | 1364 | 5142 |
| 59 | 1444 | 5718 |
| 60 | 489 | 2027 |
| 61 | 442 | 1771 |
| 62 | 549 | 2243 |
| 63 | 474 | 1947 |

| | | |
|---|---|---|
| 64 | 1412 | 6007 |
| 65 | 1431 | 5588 |
| 66 | 1046 | 4187 |
| 67 | 1035 | 4478 |
| 68 | 1314 | 5262 |
| 69 | 1503 | 5814 |
| 70 | 801 | 3152 |
| 71 | 684 | 2729 |
| 72 | 1627 | 6409 |
| மொத்தம் | 59961 | 245561 |

அலுவலகக் குறிப்பு தகவலுக்காக ந.க.எண் 1237 /2007 (எம்சி1)எம்சி5

**மாமன்ற தீர்மான எண் 70 நாள் 23.07.07**

தனியார் நிறுவனம் மூலம் கணக்கெடுப்பு செய்து மறு ஆய்வு செய்து மீண்டும் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 30**

கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண் 55-க்குட்பட்ட பகுதியில் உள்ள திரு. வி.க. வீதியிலுள்ள பொதுக் கழிப்பிடத்திற்கு கூடுதல் கழிவறைகள் கட்டுதல் மற்றும் பால்வாடி கட்டுதல் பணிக்கு தேசிய குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டம் 2004-05-ன் கீழ் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.5.00 மற்றும் ரூ. 1.50 இலட்சங்களுக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 77 தேதி 30-06-2005-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேற்படி பணிகள் செய்ய தகுந்த இடவசதி இல்லாத சூழ்நிலை உள்ளது. இரண்டு பணிகளையும் ரத்து செய்ய மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 4821/2005/ தொ.நு.உ..2

**மாமன்ற தீர்மான எண் 71 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 31**

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண் 2 – வார்டு எண் 17க்குட்பட்ட வீ.ஜீ.ராவ் நகர் பிரதான சாலைக்கு தார் தளம் புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 15,90,000-ற்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 4937 /2007 / எம்.டி.2

**மாமன்ற தீர்மான எண் 72 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 32**

கோவை மாநகராட்சி ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல் திட்டத்திற்காக மாநகராட்சி எல்லைக்குட்பட்ட எட்டு குளங்களை புனரமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.127.05 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் நிதி உதவியில் உள்ளாட்சிகள் திட்டத்தினை மேற்கொள்கையில் , திட்ட நிதியினால் உண்டாகும் சொத்து முழுவதும் மாநகராட்சியின் சொத்தாகிறது. எனவே மாநகரில் உள்ள 8 நீர் நிலைகளை மாநகராட்சி பொறுப்பில் எடுக்க மாமன்றம் தனது தீர்மான எண் 249 நாள் 02-02-2007-ல் தீர்மானித்துள்ளது. தீர்மானத்தின்படி 05-02-2007-ல் அரசுச் செயலர் , பொதுப்பணித்துறை அவர்களுக்கு மேற்படி 8 நீர் நிலைகளை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

விரிவான திட்ட அறிக்கையை பரிசீலனை செய்து தொழில் நுட்பம் சார்ந்த கருத்துருக்களை மாநகராட்சி வசம் தெரிவிக்க கோரி தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை , பொள்ளாச்சி மண்டலம் அவர்கள் தனது 4-07-2007 தேதிய கடிதத்தில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான எட்டு குளங்களை பரிசீலனை செய்ததில் நிர்வாக காரணத்தாலும், நீர் விநியோக கட்டுப்பாட்டு நிர்வாக காரணத்தாலும் நொய்யல் ஆற்றின் பாசனத் தொடர் குளங்களின் படி (Noyyal chain of tank ) கோவை மாநகராட்சி வசம் ஒப்படைப்பதில் தற்போது எந்த வித சாத்தியக் கூறுகள் இல்லை என்ற பதில் அறிக்கையையை ஏற்கனவே அரசுக்கு சமர்பித்ததை தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி திட்டத்தினை செயல்படுத்த பொதுப்பணித்துறைக்கு வைப்புத் தொகை (Deposit works ) பணியாக எடுத்து செயல்படுத்தும் வகையில் உரிய நிதி ஒதுக்கீட்டினை செலுத்தும்படி கருத்து தெரிவித்து உள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண் 13088 /2006/ எம்.டி.3

## மாமன்ற தீர்மான எண் 73 நாள் 23.07.07

பொதுப்பணித்துறை ஏற்கனவே பராமரித்து வந்த நகரின் நடுவே செல்லும் பிரதான சங்கனூர் கால்வாயை பொதுப்பணித்துறை (க்யு 1) அரசாணை 206 நாள் 22.03.2004-ல் மாநகராட்சியிடம் ஒப்படைக்கக் கூறி அரசு ஆணையிட்டது. ஏற்கனவே இந்த கால்வாயினைச் சுற்றி ஏராளமான ஆக்கிரமிப்புகள் உண்டாகி மழைக்காலங்களில் மழைநீர் குடியிருப்புகளில் புகுவதால் பொதுமக்கள் சுகாதாரமின்றி வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோல் 8 நீர்நிலைகளிலும் அதன் கரைகளிலும் ஆக்கிரமிப்புகளை அகற்றாமலும், தொடர்ந்து குளங்கள் பராமரிக்கப்படாததாலும், மழைக்காலங்களில் குளங்களில் அதிக நீர்வரத்து வரும்போது ஆக்கிரமிப்பு பகுதியில் உள்ள மக்கள் மிக அவதியுற்றபோது, ஒவ்வொரு வருடமும் மாநகராட்சிதான் அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் அடிப்படை வசதி போன்றவைகளை வழங்குகிறது. பொதுப்பணித்துறை எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. மேலும் கோவை மாநகரில் வாழும் 10 இலட்சம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது மாநகராட்சியின் கடமை. பொதுப்பணித்துறை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஜவகர்லால்நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் இதுபோன்ற ஆக்கிரமிப்புகளில் இருக்கும் அனைத்து பகுதிகளையும் கணக்கெடுத்து திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவர்களுக்கு நல்ல ஆர்.சி.சி. கூரை வீடுகளை கட்டிக் கொடுக்க மாநகராட்சி முடிவு எடுத்துள்ளது. அப்போது குளங்கள் மற்றும் பள்ளம் போன்ற ஆக்கிரமிப்பு பகுதிகளிலும் மாநகராட்சி பகுதிகளிலும் இருக்கும் ஆக்கிரமிப்புகளை மாற்றி அமைக்கும்போது ஆக்கிரமிப்பில் உள்ள வீடுகளை காலி செய்து நீர்நிலைகளை நன்றாக துார்வாரி கரைகளை பலப்படுத்தி அப்பகுதி மக்களுக்கு சுகாதாரமாக வாழ வைக்க மாநகராட்சியால் மட்டுமே இயலும். தற்போது மழைகாலங்களில் தொற்று நோய் பரவாமல் இருப்பதற்காக அந்த பகுதியில் கிருமி நாசினிகளை தெளித்தும், மருத்துவக் குழுக்களை அனுப்பியும் மற்றும் மருத்துவ முகாம்களை அமைத்தும் மாநகராட்சிதான் பணி செய்து வருகிறது. எனவே மாநகராட்சி பகுதிகளில் உள்ள நீர்நிலைகளையும் பொதுப்பணித்துறை மாநகராட்சியிடம் ஒப்படைத்தால்தான் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த முடியும் என்பதால் 8 குளங்களையும் மாநகராட்சி வசம் ஒப்படைக்க மீண்டும் அரசை வலியுறுத்தக் கோர தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 33

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு 25-4-2007-ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கீழ்குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு மட்டும் ஏலம் கோரப்பட்டுள்ளது.

1. N.H. ரோடு வணிக வளாகம் (புதிய கடைகள்)

| வ.எண். | ஏலதாரர்கள் | கடை எண். | அளவு | ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|---|
| 1. | திரு. முகம்மது இல்லியாஸ் | 2 | 10 x 12 | ரூ.1500/- |
| 2. | திரு. C.K.மொய்து | 3 | 10 x 12 | ரூ.1500/- |

மேற்படி இரண்டு கடைகளுக்கு ஒற்றை ஒப்பந்தப் புள்ளி மட்டும் பெறப்பட்டுள்ளது. பொது ஏலத்தில் ஒருவா் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலம் நடத்தப்படவில்லை.

மேலும் மேற்படி வணிக வளாகத்தில் உள்ள 3 கடைகள் கடந்த ஏழு வருடங்களுக்கு மேல் காலியாக உள்ளது. பலமுறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை.

2. வ.உ.சி.பூங்கா வணிக வளாகம்

| வ.எண். | ஏலதாரா் | கடை எண். | அளவு | ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|---|
| 1. | திரு. உமா் | 5 | 8 X 6 | ரூ.2250/- |

இது பொது ஏலத்தில் கேட்கப்பட்ட உயா்ந்தபட்ச கேள்வி ஆகும். இதற்கு ஒப்பந்தப் புள்ளி ஏதும் பெறப்படவில்லை.

மேற்படி கடையும் நீண்டநாட்களாக காலியாக உள்ளது. பலமுறை ஏலம் விடப்பட்டும் ஏலம் கோர முன்வரவில்லை.

மேற்குறிப்பிட்டுள்ள வணிக வளாகக் கடைகளுக்கு பெறப்பட்ட ஏலக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வது தொடா்பாக மன்றத்திற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது. அவசர அவசியத்தைக் கருதி கணக்குக் குழு தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் எண். 22659/2003/அ10

**மாமன்ற தீா்மான எண் 74 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திரு ஐ. நாசா், இளநிலை பொறியாளா், இடம் வாங்கி வீடு கட்ட முன்பணம் அனுமதித்தல் - தொடா்பாக.

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலத்தில் இளநிலை பொறியாளராக பணியாற்றும் திரு ஐ. நாசா் குனியமுத்தூா் நகராட்சி பகுதிக்குட்பட்ட க.ச.எண் 590/2, 591/2, 591/3 பகுதி காலைகளில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள மனை எண் 29-ஐ தனது பெயரில் கிரையம் பெறும் பொருட்டும் அதில் வீடு கட்டிக் கொள்ளவும், மாநகராட்சி வீடுகட்டு முன்பண நிதியிலிருந்து ரூ 5.50 லட்சம் தற்போதுள்ள முன்பண விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கவும், மேற்படி தொகையினை அரசு விதிமுறைகளின்படியும், மாநகராட்சி விதிகளின்படியும் மூன்று தவணைகளில் அவருக்கு வழங்கவும், மேற்படி அசல் தொகையினை 140 (நூற்றி நாற்பது) மாத தவணைகளிலும், பின்னா் வட்டி தொகையினை 60 மாத தவணைகளிலும் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமா்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 9312/06/ சி1/மே6

**மாமன்ற தீா்மான எண் 75 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 35**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட அவினாநி ரோடு வணிக வளாகத்தில் கடை எண் 22 திரு. பி. பழனிச்சாமி என்பவா் பெயரில் உள்ளது. இக்கடைக்கு 1-4-1997 முதல் 30-6-2006 வரை ரூ.4,26,292- உரிமத் தொகை செலுத்தப்படாமல் நிலுவை உள்ளது. மேலும் கடை எண் 23 திரு சி.வி. சுப்பிரமணியம் என்பவா் பெயரில் உள்ளது. இக்கடைக்கு 1-4-1997 முதல் 30-6-2007 வரை ரூ 4,74,911- உரிமத் தொகை செலுத்தப்படாமல் நிலுவை உள்ளது. எனவே மேற்படி கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மாநகராட்சி பொறுப்பில் சுவாதீனம் எடுத்து, மறு ஏலம் விடவும், ஷை நிலுவைத் தொகையினை மேற்படியாா் செலுத்தியுள்ள வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்தும், பற்றாக்குறையான நிலுவைத் தொகைக்கு நீதிமன்றம் மூலம் வழக்கு தொடா்ந்து நிலுவைத் தொகையினை வசூல் செய்வதற்கும் மேற்படி கடைகளை மறு ஏலம் விடுவதன்மூலம் ஏற்படும் வருவாய் இழப்பினை சம்பந்தப்பட்ட கடைதாரா்களிடமே வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்.　　　　　　　　　　　ந.க.எண் 1712/2007/ அ10

**மாமன்ற தீர்மான எண் 76 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 36**

இணைச்செயலாளர் (கன்சுலர்) வெளியுறவுத் துறை அமைச்சரகம், இந்திய அரசு, புதுடெல்லி அவர்களின் கடித எண். 1938/JS (cons)/2007 நாள் . 5.6.2007 -ல் கோயம்புத்தூரில் பாஸ்போர்ட் அலுவலகம் வைப்பதற்கு மாநகராட்சிக்கு சொந்தமான அவினாசி சாலை உப்பிலிபாளையம் சந்திப்பில் உள்ள வணிக வளாகத்தின் முதல் தளத்தில் 12148 சதுரடி பரப்பளவில் கட்டிடம் கட்டி, அக்கட்டிடத்தினை வருவாய்துறையினரால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டள்ளது.

மேற்படி இடம் அவினாசி சாலை உப்பிலிபாளையம் சந்திப்பில் தேர்தல் வார்டு எண். 27-ல் அமைகிறது. கோயம்புத்தூர் அனுப்பர் பாளையம் கிராமம், நகரளவு எண். 747 –ல் மாநகராட்சி வணிக வளாகம் உள்ளது. அதன் முதல் தளத்தில் 12099.51 சதுரடி மட்டுமே உள்ளது. மேற்கண்ட 12099.51 சதுரடி பரப்பளவில் மாநகராட்சியால் கட்டிடம் கட்டி குத்தகைக்கு வழங்க இயலும். உத்தேச கட்டுமானத்திற்கு ரூ 54.01 இலட்சம் செலவாகும். அம்மதிப்பீட்டின்படி மேற்படி இடத்திற்கு மாத வாடகையாக பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்யும் வழிகாட்டுதலின்படி ரூ 2,16,960- ஆகும்.

மேற்குறிப்பிட்ட மாத வாடகை அடிப்படையில் குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதியுடன் குத்தகைக்கு வழங்கலாம். அரசால் நிர்ணயிக்கப்படும் நடைமுறை விதிகளின்படி குத்தகைத் தொகையிலிருந்து அரசு நிர்ணயம் செய்துள்ளபடி உயர்த்தி வசூல் செய்யலாம். குத்தகைக் காலம் முடிந்தவுடன், தேவைப்படின் மாமன்றம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று குத்தகைக் காலத்தை நீட்டிப்பு உத்தரவு வழங்கலாம் என்கிற நிபந்தனைகளின்பேரில் குத்தகைக்கு வழங்குவது குறித்து பொருள் மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அங்கீகரிக்கலாம்.　　　　　　　　　　ந.க.எண் 2294/2007/MH5

**மாமன்ற தீர்மான எண் 77 நாள் 23.07.07**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 37**

மாநகர பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் தமது 5.4.2007 -ம் தேதிய குறிப்பில், மாநகராட்சி கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க சிங்காநல்லூர் கிராமம், ஒண்டிப்புதூர் பகுதியில் உள்ள தாழ்வான இடத்தில் மற்றுமொரு நிலத்தினை தேர்வு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி, சிங்காநல்லூர் கிராமம் க.ச. எண். 762/3A, 761/1, 2A, 2B, 3A, 3B, 3C, 3D -இல் உள்ள 12.48 ஏக்கர் நிலத்தினை கிழக்கு மண்டல நகரசார் ஆய்வர் தேர்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி 12.48 ஏக்கர் நிலம் பட்டா நிலமாகும். இந்நிலம் பட்டணம் சாலைக்கு கீழ்புறம் நொய்யல் ஆற்றின் வடபுறக் கரையில் அமைந்துள்ள இடமாகும். இந்த இடம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உகந்த இடமாக கருதப்படுகிறது. இதர நிலங்களின் விலையை ஒப்பிடுகையில் இந்நிலத்தின் விலை குறைவாகவே உள்ளது.

எனவே, சிங்காநல்லூர் கிராமம், சர்வே எண். 762/3A, 761/1, 2A, 2B, 3A, 3B, 3C, 3D -ல் உள்ள மொத்த விஸ்தீரணத்தில் 12.48 ஏக்கர் நிலத்தை மட்டும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக நில ஆர்ஜித சட்டம் 1894 பிரிவு 17-இல் உள்ள அவசரப் பிரிவின்கீழ் கட்டாய நில ஆர்ஜிதம் (Urgency clause) செய்ய மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அங்கீகரிக்கலாம்.　　　　　　　　　ந.க.எண் 2069 / 2007 / எச்1 (கி).

மாமன்ற தீர்மான எண் 78 நாள் 23.07.07

சிங்காநல்லூர் கிராமம் சர்வே எண் 762/3A, 761/1, 2A, 2B, 3A, 3B, 3C, 3D -ல் உள்ள மொத்த விஸ்தீரண்த்தில் 12.48 ஏக்கர் நிலத்தை மட்டும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக நில ஆர்ஜித சட்டம் 1894 பிரிவு 17-ல் உள்ள அவசரப் பிரிவின்கீழ், கட்டாய நில ஆர்ஜிதம் (Urgency clause) செய்ய அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் கட்டாய நில ஆர்ஜிதம் செய்வதற்கு உண்டாகும் இழப்பீட்டுத் தொகை மற்றும் இதர செலவினங்களுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து தொகை செலுத்த அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 38

பொருள்: குடிநீர் கட்டணம் - கோவை மாநகராட்சி – தண்ணீர் கட்டணம் திருத்திஅமைத்தல் – சம்பந்தமாக

----------

கோவை மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் சிறுவாணி அணையிலிருந்தும் பில்லூர் அணையிலிருந்தும் கொண்டு வரப்படும் தண்ணீரின் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

இம்மாநகராட்சியில் தண்ணீர் கட்டண விகிதங்கள் கடைசியாக 1.04.2003 முதல் மாநகர மன்ற தீர்மான எண். 341 நாள். 31.01.2003 ன்படி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியால் குடிநீர் திட்டப்பணிகளுக்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடன் ரூ.7.41 கோடி இன்னும் நிலுவையில் உள்ளது. அதற்காக ஆண்டு ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.2.50- கோடி செலுத்த வேண்டியுள்ளது

நமது மாநகராட்சிக்கு குடிநீர் விநியோகத்தின் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 13.50 கோடியும், சொத்து வரி மீதான தண்ணீர் வரியின் மூலம் 19 கோடியும் ஆக மொத்தம் ரூ.32.50 கோடி வருவாய் கிடைக்கிறது.

ஆனால் சிறுவாணி தண்ணீருக்காக ரூ. 14 கோடியும், பில்லூர் குடிநீருக்காக ரூ10 கோடியும் சிறுவாணி அணை பராமரிப்பு தொகையாக கேரள அரசுக்கு ரூ. 5 கோடியும், கடன் திருப்பி செலுத்தும் வகையில் ரூ.2.50 கோடியும் அலுவலர்களின் ஊதியத்திற்காக 4 கோடியும், மின்கட்டணமாக ரூ. 1 கோடியும், தனியார் லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய ரூ. 1 கோடியும் இதர தண்ணீர் குழாய் பராமரிப்பு மற்றும் வாகன பராமரிப்பிற்காக ரூ. 1 கோடியும் ஆக மொத்தம்
ரூ. 38.50 கோடி ஆண்டுதோறும் தேவைப்படுகிறது .

எனவே குடிநீர் விநியோகத்தின் மூலம் வரவு ரூ. 32.50 கோடியும் செலவு ரூ. 38.50 கோடி ஆக ஒவ்வொரு ஆண்டும் பற்றாக்குறை ரூ. 6 கோடி ஏற்படுகிறது.

மேலும் கோவை மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு சிறுவாணி குடிநீர் கட்டண நிலுவை ரூ 84.03 கோடியும், பில்லூர் குடிநீர் கட்டண நிலுவை ரூ. 23.09 கோடியும் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின்கட்டண நிலுவை ரூ. 1.40 கோடியும் ஆகமொத்த ரூ.108.52 கோடி நிலுவை இன்னும் செலுத்த வேண்டி உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ஆயிரம் லிட்டர் குடிநீர் ரூ.4.50 வீதம் விலைக்கு வாங்கி மாநகர மக்களுக்கு ஆயிரம் லிட்டர் ரூ.3.50 வீதம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

ஜவஹர்லால் நேரு நகர்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் தற்போது வடிவமைக்கப்பட்டுள்ள பில்லூர் குடிநீர் திட்டம் II ன் மொத்த மதிப்பீடான 113.74 கோடியில் மாநகராட்சியின் 30 சதவீத பங்குத்தொகை ரூ. 34.20 கோடியாகும். இத்தொகை முழுவதும் தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி அபிவிருத்திக் கழகத்திடமிருந்து, 8 சதவிகித வட்டி விகிதத்தில் கடனாகப் பெற திட்டமிடப்பட்டுள்ளது. இக்கடனுக்கான அசல் மற்றும் வட்டியாக ரூ.4.44 கோடி ஆண்டு தோறும் செலுத்தவேண்டும்.

மேற்கண்ட திட்ட மதிப்பீட்டில் 20 சதவீதத் தொகை ரூ.22.80 கோடி மாநில அரசின் பங்குத்தொகையாகும். இத்தொகையினை மாநில அரசு மாநகராட்சிக்கு வட்டியில்லாத கடனாக வழங்குகின்றது. இத்தொகை முழுவதும் ஏழு ஆண்டுகளில் மாநகராட்சி திரும்ப செலுத்த வேண்டும். இதற்காக ரூ. 3.25 கோடி ஆண்டுதோறும் தேவைப்படுகிறது.

ஆண்டு தோறும் ஏற்படுகின்ற நிகர பற்றாக்குறை ரூ.6 கோடியினை சரிசெய்வதற்கும் மாநகராட்சி பங்குத் தொகைக்காக பெறப்பட்ட கடனை திருப்பி செலுத்த தேவைப்படும் தொகை ரூ.4.44 கோடி மற்றும் மாநில அரசு வட்டியில்லா கடனாக வழங்கிய தொகையை திருப்பி செலுத்த தேவைப்படும் ரூ. 3.25 கோடி ஆக மொத்தம் ரூ.13.69 கோடி தண்ணீர் கட்டண சீரமைப்பின் மூலம் பெறப்படவேண்டும். குடிநீர்கட்டண சீரமைப்பு தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உள்ளதால் குடிநீர் கட்டணத்தை கீழ்கண்டவாறு திருத்தி அமைக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கடந்த 21.06.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மான எண் 18 ன் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி இப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

தற்போது திருத்தி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண விகிதம்

| தற்போதைய கட்டணம் | | திருத்தியமைக்க உத்தேசித்த கட்டண விகிதம் | |
|---|---|---|---|
| 1. வீட்டு உபயோகத்திற்கு<br>அ. இலவச விநியோகம் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் | | 1. வீட்டு உபயோகத்திற்கு<br>அ. இலவச விநியோகம் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் | |
| ஆ. இருமாத உபயோக அளவு | ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஆ. இருமாத உபயோக அளவு | ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| இலவச சலுகை நீங்கலாக அதிகப்படி விநியோகம் அளவு | ரூ.பை. | இலவச சலுகை நீங்கலாக அதிகப்படி விநியோகம் அளவு | ரூ.பை. |
| 1. 50,000 லிட்டர் வரை | 3.50 | 1. 50,000 லிட்டர் வரை | 7.00 |
| 2. 50,001-1,00,000 லிட்டர் வரை | 4.00 | 2. 50,001-1,00,000 லிட்டர் வரை | 8.00 |
| 3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை | 5.00 | 3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை | 10.00 |
| 4 . 1,50,001- லிட்டருக்கு மேல் | 6.50 | 4 . 1,50,001- லிட்டருக்கு மேல் | 13.00 |
| இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ. 80/- | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.160/- |
| 2. பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்தவிநியோகம் வீட்டு உபயோக முறையில் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு<br>அ. இலவச விநியோகம் இல்லை | | 2. பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் வீட்டு உபயோக முறையில் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு<br>அ. இலவச விநியோகம் இல்லை | |
| ஆ. இரு மாத உபயோக அளவு | ஒவ்வொரு ஆயிரம் லிட்டரும் அதன் பாகத்திற்கும் | ஆ. இரு மாத உபயோக அளவு | ஒவ்வொரு ஆயிரம் லிட்டரும் அதன் பாகத்திற்கும் |
| 1. 50,000 லிட்டர் வரை | 3.50 | 1. 50,000 லிட்டர் வரை | 7.00 |
| 2. 50,001-1,00,000 லிட்டர் வரை | 4.00 | 2. 50,001-1,00,000 லிட்டர் வரை | 8.00 |
| 3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை | 5.00 | 3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை | 10.00 |
| 4 . 1,50,001- லிட்டருக்கு மேல் | 6.50 | 4 . 1,50,001- லிட்டருக்கு மேல் | 13.00 |
| இருமாத குறைந்தபட்ச கட்டணம் ரூ. | 600 | இருமாத குறைந்தபட்ச கட்டணம் ரூ.1200 | |

| | |
|---|---|
| ஆ) வீட்டு உபயோகம் அல்லாததற்கு<br>அ) இலவச விநியோகம் இல்லை | ஆ) வீட்டு உபயோகம் அல்லாததற்கு<br>அ) இலவச விநியோகம் இல்லை |
| ஆ. இருமாத உபயோக அளவு ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஆ. இருமாத உபயோக அளவு ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |

| | |
|---|---|
| 1. 50,000 லிட்டர் வரை 7.00<br><br>2. 50,001-1,00,000 லிட்டர் வரை 9.00<br><br>3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை 12.00<br><br>4 . 1,50,001- லிட்டருக்கு மேல் 15.00 | 1. 50,000 லிட்டர் வரை 14.00<br><br>2. 50,001-1,00,000 லிட்டர் வரை 18.00<br><br>3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை 24.00<br><br>4 . 1,50,001- லிட்டருக்கு மேல் 30.00 |
| இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் ரூ. 350/- | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் ரூ. 700/- |
| 2. பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் வீட்டு உபயோகம் அல்லாதமுறையில் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | 2. பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் வீட்டு உபயோகம் அல்லாதமுறையில் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
| அ. இலவச விநியோகம் இல்லை | அ. இலவச விநியோகம் இல்லை |
| ஆ. இருமாத உபயோக அளவு ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஆ. இருமாத உபயோக அளவு ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1. 50,000 லிட்டர் வரை 7.00<br><br>2. 50,001-1,00,000 லிட்டர் வரை 9.00<br><br>3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை 12.00<br><br>4 . 1,50,001- லிட்டருக்கு மேல் 15.00 | 1. 50,000 லிட்டர் வரை 14.00<br><br>2. 50,001-1,00,000 லிட்டர் வரை 18.00<br><br>3. 1,00,001-1,50,000 லிட்டர் வரை 24.00<br><br>4 . 1,50,001- லிட்டருக்கு மேல் 30.00 |
| இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் ரூ. 900/- | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் ரூ. 1800/- |
| ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கும் மாதம் ஒன்றிக்கு ரூ.50.00 | குழாய் முறையில் நீர் வீட்டு ஊபயோகத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 100 |
| 1. குழாய் இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.50.00<br><br>2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60.00 | குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 100<br><br>கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 120 |

ஆண்டு தோறும் அதிகரித்து வரும் நிர்வாகச் செலவினை சரி செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் 10% உயர்த்தலாம்.

குறிப்பு :-

நீர்மானி பழுதடைந்து சரியான அளவு காண்பிக்காத காலத்திற்கு அதற்கு முந்தின ஓராண்டில் நீர்மானி இயங்கிய காலத்தில் எடுத்த அளவுகளில் அதிக பட்சமாக உபயோகித்த தண்ணீர் அளவின் அடிப்படையில் கட்டணம் விதித்து வசூலிக்கப்படும்.

இந்த உத்தேச கட்டண விகிதத்திருத்தத்தை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து 1.1.2008 முதல் அமுல்படுத்த மேற்கண்ட பொருளை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி கடந்த 21.06.2007 அன்று வைக்கப்பட்டது. அவ்வாறு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 18 நாள். 21.06.2007 ல் இப்பொருளை அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி இப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். <u>(ந.க.எண். 4848/2003/குவி3)</u>

**khkd;w jPh;khd vz; 79 ehs; 23/07/07**

**tPl;L cgnahfj;jpw;F ehbshd;Wf;F ,ytr tpepnahfk; 100 ypl;lh; tH';ft[k; ,U khj cgnahf mst[ xt;bthU Mapuk; ypl;lUf;Fk;. mjd; ghfj;jpw;Fk; mjpfg;go tpepnahf mst[ ,ytr rYif eP';fyhf**

**1/ 50.000 ypl;lh; tiu U: 4/50-?**
**2/ 50.001 Kjy; 1.00.000 ypl;lh; tiu U: 6/00-?**
**3/ 1.00.001 ypl;lh; Kjy; 1.50.000 ypl;lh; tiu U: 8/00-?**
**4/ 1.50.001 ypl;lUf;F nky; U: 11/00-?**
**,Ukhj Fiwe;jgl;r fl;lzk; U: 120-/ vdt[k;**

**bghJ epWtd';fs; Kjypatw;wpw;F bkhj;j tpepnahfk; tPl;L cgnahf Kiwapy; 20 vk;/vk;/ tpl;lj;jpw;F mjpf mstpyhd FHha; ,izg;g[fSf;F ,ytr tpepnahfk; ,y;iy/ ,U khj cgnahf mst[**
**xt;bthU Mapuk; ypl;lUf;Fk;. mjd; ghfj;jpw;Fk;**

**1/ 50.000 ypl;lh; tiu U: 5/25-?**
**2/ 50.001 Kjy; 1.00.000 ypl;lh; tiu U: 6/00-?**
**3/ 1.00.001 ypl;lh; Kjy; 1.50.000 ypl;lh; tiu U: 8/00-?**
**4/ 1.50.001 ypl;lUf;F nky; U: 10/00-?**
**,Ukhj Fiwe;jgl;r fl;lzk; U: 900-/ vdt[k;**

**tPl;L cgnahfk; my;yhjjw;F ,ytr tpepnahfk; ,y;iy/ ,Ukhj cgnahf mst[ xt;bthU Mapuk; ypl;lUf;Fk;. mjd; ghfj;jpw;Fk;**

**1/ 50.000 ypl;lh; tiu U: 10/50-?**
**2/ 50.001 Kjy; 1.00.000 ypl;lh; tiu U: 13/50-?**
**3/ 1.00.001 ypl;lh; Kjy; 1.50.000 ypl;lh; tiu U: 18/00-?**
**4/ 1.50.001 ypl;lUf;F nky; U: 22/50-?**
**,Ukhj Fiwe;jgl;r fl;lzk; U: 525-/ vdt[k;**

**bghJ epWtd';fs; Kjypatw;wpw;F bkhj;j tpepnahfk; tPl;L cgnahfk; my;yhj Kiwapy; 20 vk;/vk;/ tpl;lj;jpw;F mjpf mstpyhd FHha; ,izg;g[fSf;F ,Ukhj cgnahf mst[ ,ytr tpepnahfk; ,y;iy/ ,Ukhj cgnahf mst[ xt;bthU Mapuk; ypl;lUf;Fk;. mjd; ghfj;jpw;Fk;**

**1/ 50.000 ypl;lh; tiu U: 10/50-?**
**2/ 50.001 Kjy; 1.00.000 ypl;lh; tiu U: 13/50-?**
**3/ 1.00.001 ypl;lh; Kjy; 1.50.000 ypl;lh; tiu U: 18-?**
**4/ 1.50.001 ypl;lUf;F nky; U: 22/50-?**
**,Ukhj Fiwe;jgl;r fl;lzk; U: 1350-/ vdt[k;**

**FHha; Kiwapy; ePh; tPl;L cgnahfj;jpw;F khjk; xd;wpw;F U: 50-? vdt[k;. FHha; Kiwapy; fpzw;W ePh; tPl;L cgnahfj;jpw;F khjk; xd;wpw;F U: 50-? vdt[k; TLjy; FHha; ,izg;g[ xt;bthd;Wf;Fk; khjk; xd;Wf;F U: 60-? vdt[k; eph;zak; bra;J jPh;khdpf;fg;gl;lJ/**

பொருள் எண் 39

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட உள்ளது. தற்பொழுது மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 20 கோடி செலவாகி வருகிறது. தற்போது செயலாக்க உள்ள புதிய திட்டத்தின் கீழ் கழிவுகளை மக்கும் குப்பை , மக்கா குப்பை என தரம் பிரிக்க ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு கொள்கலன்கள் வழங்குவதுடன் அவ்வாறு மக்கும் குப்பை , மக்கா குப்பை என பிரித்து வீட்டில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று சேகரம் செய்து தெருக்களில் வைக்கப்படும் கொள்கலன்களில் சேமித்து அவைகளை முழுவதும் மூடப்பட்ட வாகனங்கள் மூலம் சுகாதார கேடு இன்றி குப்பை மாற்று நிலையத்தில் கொட்டப்படும். குப்பை மாற்று நிலையத்திலிருந்து பெரிய வாகனங்களில் மக்கும் குப்பைகளை உரம் தயாரிக்க உரக்கிடங்கிற்கும் , மறு சுழற்ச்சிக்கு தகுதியானவைகளை மறுசுழற்ச்சி நிலையங்களுக்கும் மக்காத குப்பை மற்றும் மறுசுழற்ச்சியிலிருந்து எடுக்கப்பட்ட கழிவுகளை விஞ்ஞான முறைப்படி சுகாதார கட்டமைப்பு ( Sanitary landfill ) நிலையத்திற்கும் எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து திடக்கழிவு மேலாண்மையும் மேற்கொள்ள மத்திய மாநில அரசு நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றாலும் அன்றாடம் ஆகும் பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ. 17.56 கோடி ஆண்டொன்றிற்கு செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது ஆகும் செலவினத்துடன் நடைமுறைப்படுத்தவுள்ள புதிய திட்டத்திற்கும் சேர்த்து உத்தேசமாக ரூ 37.56 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவின் ஒரு பகுதியையாவது பொதுமக்கள் பங்களிப்பாக பெறப்பட்டால் மட்டுமே திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகும் எனவே மிகக் குறைந்த விகிதத்தில் பின்வருமாறு திடக்கழிவு பயனாளிகள் சேவை கட்டணம் வசூல் செய்யலாம்.

1) குடியிருப்பு வீடுகள் - வீடு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு : ரூ. 1/-

2) ஒவ்வொரு கடை / நிறுவன வாரியாக குப்பைகள் சேகரிக்கப்படும் கடைகள் மற்றும் நிறுவனங்களுக்கு நாள் ஒன்றுக்கு : ரூ 2/-

3) உணவகங்கள் / கல்யாண மண்டபங்கள்/ வணிக நிறுவனங்கள்

மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து சிறிய வாகனம் (3 டன்கள்) மூலம் அகற்ற ( நடை ஒன்றுக்கு ) : ரூ 500/-

4) உணவகங்கள் / கல்யாண மண்டபங்கள்/ வணிக நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து பெரிய வாகனம் ( 3 டன்னுக்கு மேல்) மூலம் அகற்ற ( நடை ஒன்றுக்கு ) : ரூ 1000/-

இதன் மூலம் கிடைக்கும் ஆண்டிற்கு சுமார் ரூ. 7 /- கோடியின் மூலம் மேற்கண்ட செலவினத்தை ஈடு செய்யலாம். இப் பொருள் குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு தனது தீர்மான எண் 15 நாள் 21-06-2007 ல் பரிந்துரை வழங்கியதின் பேரில் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : 13087/2006/MD3

மாமன்ற தீர்மான எண் 80 நாள் 23,07,07

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 40

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட டாக்டர் நஞ்சப்பா ரோடு வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் கீழ்க்குறிப்பிட்டுள்ள அரசு அலுவலகங்களுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்துவிட்டதால் மேற்கொண்டு மூன்று வருடங்களுக்கு அரசு ஆணை (டி) எண். 135, நாள். 13.07.1994-ன்படி 15% வாடகை உயர்வு

செய்து உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. எனவே கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயா்வு செய்து பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | அரசு துறை அலுவலகம் | உரிமக் காலம் | தற்போதைய வாடகை | 15% உயா்வு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | முதன்மை மின்சார ஆய்வாளா் அலுவலகம் | 01.04.2005 to 31.03.2008 | ரூ 23,920/- | ரூ 27,508/- |
| 2. | வணிக வரி அலுவலா், பீளமேடு, தெற்கு வட்டம் | 01.04.2005 to 31.03.2008 | ரூ 5,003/- | ரூ 5,753/- |
| 3. | வணிக வரி அலுவலா், (அ) பீளமேடு, வடக்கு வட்டம் | 01.04.2004 to 31.03.2007 | ரூ 6,510/- | ரூ 7,487/- |
| | வணிக வரி அலுவலா் (ஆ) பீளமேடு, வடக்கு வட்டம் | 01.04.2007 to 31.03.2010 | ரூ 7,487/- | ரூ 8,610/- |
| 4. | நகர ஊரமைப்பு துணை இயக்குநா் அலுவலகம் | 01.04.2005 to 31.03.2008 | ரூ 15,600/- | ரூ 17,940/- |
| 5. | வணிக வரி அலுவலா், ஆவாரம்பாளையம் வட்டம் | 01.04.2006 to 31.03.2009 | ரூ 6,504/- | ரூ 7,480/- |
| 6. | காவல்துறை கண்காணிப்பாளா், குற்றப்புலனாய்வுத்துறை | 01.04.2005 to 31.03.2008 | ரூ 8,463/- | ரூ 9,732/- |

மேலும் இவ்வணிக வளாகத்தில் 01.01.1993 முதல் 30.04.2007 வரை செயல்பட்டு வந்த Q பிராஞ்ச் C.I.D. அலுவலகத்திற்கு ஏற்கனவே மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15% உயா்வு செய்வதற்குப்பதிலாக ஆறாண்டுகளுக்குப் பின் 30% சதவீதம் உயா்வு செய்யப்பட்டுள்ளதால் அரசாணையின்படி கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு உரிமத்தொகை நிா்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | உரிமக் காலம் | முந்தைய உரிமக் கட்டணம் | உயா்த்தப்பட்ட சதவீதம் | உயா்வு செய்து நிா்ணயிக்கப்பட்ட உரிமத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | 01.01.93 முதல் 31.12.1995 வரை | - | - | ரூ.3,995/- |
| 2. | 01.01.96 முதல் 31.12.1998 வரை | ரூ.3,995/- (மாதம் ஒன்றுக்கு) | 15% | ரூ.4,594/- (மாதம் ஒன்றுக்கு) |
| 3. | 01.01.99 முதல் 31.12.2001 வரை | ரூ.4,594- (மாதம் ஒன்றுக்கு) | 15% | ரூ.5,283/- (மாதம் ஒன்றுக்கு) |
| 4. | 01.01.2002 முதல் 31.12.2004 வரை | ரூ.5,283/- (மாதம் ஒன்றுக்கு) | 15% | ரூ.6,076/- (மாதம் ஒன்றுக்கு) |
| 5. | 01.01.2005 முதல் 30.04.2007 வரை | ரூ.6,076/- (மாதம் ஒன்றுக்கு) | 15% | ரூ.6,987/- (மாதம் ஒன்றுக்கு) |

மேற்குறிப்பிட்டுள்ள அரசு அலுவலகங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயா்வு செய்வதற்கு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டது. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண். 14, நாள்.21.06.2007-ல் மேற்படி பொருளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானத்தின் மீது மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்.                    ந.க.எண் 4792/2003/ அ 10

**மாமன்ற தீர்மான எண் 81 நாள் 23.07.07**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 21.06.07 ம் தேதிய தீர்மான எண் 14-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி